# யோபு

# JOB

## 55-02-23

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# யோபு

# JOB

## Phoenix Arizona U.S.A.

## 55-02-23

மாலை வணக்கம் நண்பர்களே. நம்முடைய ஸ்தோத்தரிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் பிரசங்கிப்பதற்கு மறுபடியுமாக இன்றிரவில் இங்கு இருப்பதற்கு மிக்க மகிழ்ச்சி.

நான் இவ்வாறாக உள்ளே வருகிறதற்கு ஒரு கொஞ்ச நேரத்திற்கு முன்பாக என்னுடைய நண்பர் ஒருவரையும், உங்களுடைய நண்பர் ஒருவரையும் சந்தித்தேன். அநேக மக்கள் அவரை அறிவார்கள். இன்றிரவு எனக்காக அவர் பேச விருப்பமா என்று நான் அவரைக் கேட்டேன். அவர் அதைச் செய்ய விரும்பவில்லை. இவ்வாறாக அது சகோதரன் பால்கேயினாக இருக்கிறது. சகோதரன் பால்கேயின், ஒரு கொஞ்ச நேரத்திற்கு, நீங்கள் இங்கே கொஞ்சம் வெளியே வரமுடியுமா-? சகோதரன் பால்கேயினுக்கு எல்லா இடங்களிலும் ஊழிய நண்பர்கள் இருக்கின்றனர். மேலும் அப்பால் ஊழியத்திலிருந்து நம்முடைய விருந்தினர்களான சகோதரர்கள் எங்களோடு இருப்பதில் நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருக்கின்றோம். இப்பொழுது நாம் இருக்கும் இந்த மகத்தான அறுவடையில் எஜமானுக்காக ஆத்துமாக்களை அறுவடை செய்வதைப் பற்றி அநேகமாக நாம் நிறைய வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ளலாம்.

2. நான் கூறினவிதமாகவே, கடந்த இரவு ஒரு அற்புதமான கூட்டம் இருந்தது. அது அபூர்வமாக அது போன்று எப்பொழுதாவது சம்பவிக்கும். ஆனால் ஜனங்கள், சிலவேளைகளில், ஜெப அட்டைகள் கொடுக்கப்படும் வேளையிலும், ஜனங்களைக் கொண்டு வருவதிலும் நமக்கு ஒரு சொற்பமே இருக்கும்... "நல்லது, அநேகரை மேலே கொண்டு வாருங்கள், ஒரு குறிப்பிட்ட..." என்று நான் இவ்விதமாக மேலே வந்து கூறுவேன். அங்கே அதில் அதிகமானவைகளை நாம் பெற முடியாது. ஆனால் சில சமயங்களில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வரும் போது, இவ்வாறாக இடத்துக்கு இடம் அதைப் போன்று அதிகமானவைகளை அவர் செய்ய முடியும்.

அவர்கள் கூறினர்... வியாதியஸ்தர்களை சுமந்து செல்லும் ஒரு படுக்கையில் கட்டப்பட்டிருந்த ஒரு பெண் மேலும் ஊனமுற்றோர் நடக்கப் பயன்படுத்தும் கவை வடிவ கொம்புகளைக் கொண்டு சிலரும், ஒரு சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த ஒரு முடமான ஒரு பெண்ணும் சுகமடைந்தனர் என்று அவர்கள் கூறினார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். நம்முடைய கர்த்தர், தேவனாய் இருக்கின்றார், அவர் அவ்வாறு இருக்கவில்லையா-? மேலும் அவர் அதிசயமானவராகவும், அற்புதமானவராகவும் இருக்கிறார்.

3. இப்பொழுது இன்றிரவில் கர்த்தர் மீதமுள்ள அடிப்படை நம்பிக்கை மீது நாம் அணுகுகிற வேளையில், சுவிஷேசத்தின் நிமித்தமாக, நாம் புஸ்தகத்தின் ஆக்கியோனை, அதைத் திறக்க முயற்சி செய்யும் முன்பு முதலாவதாக ஜெபத்தில் நாம் நமது தலைகளைத் தாழ்த்துவோமாக.

எங்களுடைய பிரியமான இரட்சகரே, விருப்பமுள்ளவன் எவனோ அவன் வந்து இலவசமாய் ஜீவத் தண்ணீரைப்

பெற்றுக் கொள்ளக்கடவன்" என்ற அந்த உம்முடைய அழைப்பின் அடிப்படை நம்பிக்கைகள் மீது, இன்றிரவில் நாங்கள் உம்மிடத்தில் வருகிறோம். அதற்காகத் தான் இன்றிரவு நாங்கள் வந்திருக்கிறோம், கர்த்தாவே நீர் எங்களை இப்பொழுது சந்தியும் அல்லது ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் இந்த மகத்தான கூட்டத்தில் தொடர்ந்து இரும்.

அந்தப் பிள்ளைகள் வந்து கொண்டும் அழுதுகொண்டும், ஆர்ப்பரித்துக் கொண்டும் தங்களது கரங்களை தட்டிக் கொண்டும், மேலும் களிகூர்ந்து கொண்டுமிருக்கின்றனர், ஏனென்றால் இந்தக் கடைசி நாளில் அந்த வாக்குத்தத்தமாக இருந்து கொண்டு மேலே எழும்பி இருக்கும் நித்திய ஜீவனை அவர்கள் உடையவர்களாக இருக்கின்றனர். மேலும் பிதாவே, அந்த உலக அரசாங்கங்களும் இன்னும் அதைச் சார்ந்தவைகளின் அனைத்து நம்பிக்கைகளும், மங்கி போய்க் கொண்டிருக்கின்ற, இந்த நாளில் அது எங்களை சந்தோஷமடையச் செய்கிறது. இந்த உலகமும் அதன் முறைமைகளும் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. சிகரத்தில் இருக்கும் நாகரீகமானது ஊசலாடி பிற்போக்கடைந்திருக்கிறது, ஆனால் தேவனுடைய இராஜ்ஜியமோ முழு ஆடை அணிந்து முன்னோக்கி பவனி சென்று கொண்டிருக்கிறது. பதாகைகள் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது, அந்த விடிவெள்ளி நட்சத்திரம் அந்த இறுதி யுத்தம் வரையிலும் பாதையை ஜெயத்தின் மேல் ஜெயத்திற்கு வழி நடத்திக் கொண்டிருக்கிறது, ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது, கடைசி ஜெபமானது ஜெபிக்கப்படும், வேதாகமம் மூடி வைக்கப்படும், யுத்தத்தின் புகையானது அணைந்து கொண்டிருக்கும், சூரியனானது

அஸ்தமனமடையும், பின்பு இயேசு வருவார். நாம் அவரை, அந்த அழகான ஒருவரை நாம் பார்ப்போம்.

4. ஒவ்வொரு ஊழியக்காரனுக்காகவும், மேடையின் மேல் உள்ள என்னுடைய இந்த சகோதரர்களுக்காகவும் கர்த்தாவே, நாங்கள் இந்த இரவில் ஜெபிக்கின்றோம். இப்பொழுதும் முக்கியமாக சகோதரன். கெயினுக்காக, அவருக்கு நீர் தேவையாய் இருக்கின்றீர், மேலும் தேவையுள்ளவராக இருக்கும் அவர் மேல் உம்முடைய மகத்தான வல்லமை இருக்கட்டும். ஓர் அற்புதமான விதத்தில் நீர் அவரை ஆசீர்வதிக்குமாறு நாங்கள் ஜெபிக்கின்றோம்.

ஒவ்வொரு இடத்திலுமுள்ள கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை, பெயரிட்டு அழைக்கிற எல்லா ஊழியர்களையும் ஆசீர்வதியும். பாமர மக்களையும் எங்கள் வாசல்களில் உள்ள அந்நியரையும் ஆசீர்வதியும், வியாதியஸ்தரையும் ஒடுக்கப்பட்டோரையும் சுகமாக்கும். இப்பொழுதும் பிதாவே வார்த்தையை எங்களுக்குத் திறந்து தாரும் நீர் திறக்கமாட்டீரா-? இயேசுவின் நாமத்தில் நாங்கள் இதைக் கேட்கிறோம் ஆமென்.

வார்த்தையை நான் ஒரு விதமாக நேசிக்கிறேன். இந்த பிற்பகலில் நான் இவ்வாறாக வாசிக்க ஆரம்பித்தேன். மேலும் கடந்த இரவிலிருந்து நான் கொஞ்சம் களைப்பாக இருந்தேன். கடந்த மாலை பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது என்னை விட்டு மிக சீக்கிரமாக விலகவில்லை. மேலும் - மேலும் இன்றைக்கு ஆதியாகமத்தை வாசிக்கையில் எனக்கு சற்றே ஒரு பெரிய விருந்து உண்டாயிருந்தது.

மேலும் இவ்வாறாக சுவிஷேசத்தைப் பிரசங்கிப்பது, இவ்வாறான ஒரு - இவ்வாறான எழுப்புதல்கள், இப்படி சபையிலிருந்து சபைக்கும் இடத்துக்கு இடமும் செல்லாமல்,

கர்த்தருக்கு சித்தமானால் ஒரு நாள் தேசத்தைக் கடந்து தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆத்துமாக்கள் பிறக்கிறதான, வேகமாக அடித்துக்கொண்டு போகிற ஒரு உண்மையான பழமை நாகரீகமான எழுப்புதலைப் பார்க்க விரும்பி நான் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.

5. இப்பொழுது சுகமாகுதலும், இன்னும் மற்றவைகளோடும் அது கலக்கும்போது சுற்றிலுமாக அது ஒருவித கடினமானதாகி விடுகிறது. இவ்விதமாக ஒரு சில இரவுகள் தங்கியிருந்து; அப்படியே ஒரு சில இரவுகளில் நீங்கள் களைத்துப் போய் சென்று விடுகின்றீர்கள். எனவே அந்த விதமாக ஒரே நேரத்தில் ஒரு மாதமளவும் தங்கியிருக்கலாம், பின்பு உண்மையாகவே நீங்கள் ஒரு எழுப்புதலை உடையவர்களாக இருக்கலாம்.

இப்பொழுது, யோபுவின் புத்தகத்தில் அதிகமாக நாம் நம்முடைய சிந்தைகளை, அப்படியே ஒரு அடிப்படை சிந்தையை மையப்படுத்தி, இன்றிரவு யோபுவைச் சுற்றிலும், அந்த 25, 19வது அதிகாரத்தில் அந்த 25-வது முதல் அந்த 2வது வசனம் வரையிலுமாக, அவருடைய வார்த்தையின் ஒரு பகுதியை நாம் விரும்பி வாசிப்போம்.

6. மேலும் அதைச் செய்வதற்கு முன்பாக, நான் அவைகளை மறக்க நேரிட்டிருக்குமானால் இந்த புதிதான ஒரு பெட்டி இங்கே ஜெபிப்பதற்காக இருக்கிறது என நான் விசுவாசிக்கிறேன். இப்பொழுது சற்று நீங்களும் என்னோடு கூட ஜெபத்தில் இணையும் வேளையில் நாம் ஜெபத்தில் ஒரு சிறிது நேரம் நம்முடைய தலைகளை வணங்கலாமா-?.

எங்கள் பரம பிதாவே, ஒரு அடைக்கலான் குருவியின் மரணத்தைக் கூட நீர் அறிந்திருக்கிறீர். பிதாவே சகலத்தையும் குறித்து அறிந்திருக்கின்றீர், உமது மகத்துவமான

ஆவியில்லாமல் அந்த சிறிய அற்பமான ஒரு பறவையும்கூட தெருவில் விழ முடியாதபடிக்கு அவ்வளவாக ஒவ்வொன்றுக்காகவும் உயர்ந்த பொறுப்புடையவராக இருக்கின்றீர். இன்னும் எவ்வளவு அதிகமாக உம்முடைய பிள்ளைகளாகிய எங்களை நீர் அறிந்து தெரிந்து கொள்ளப்பட்ட கிருபையினாலும், உமது குமாரனுடைய இரத்தத்தின் மூலமாக மீட்டுக் கொண்டிருக்கின்றீர், மேலும் தாழ்மையில் எங்களுடைய தலைகளை உமக்கு முன்பாக தாழ்த்துகின்றோம், மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வடிந்து கொண்டிருக்கும் பலியின் மூலமாக இரக்கத்துக்காகவும் எங்களுடைய உறவினர்களுக்காகவும் கேட்கிறோம்.

கர்த்தாவே, சிறிய பழுப்பு நிற கால்சட்டைகளும் கைக்குட்டைகளும், குழந்தைகளுக்காக அவர்கள் அணியும் உடைகளை பாதுகாக்க குழந்தைகளின் முன்பாகத்தில் அணியும் ஒருவித சிறிய ஆடைகளும், அவைகள் தேவை உள்ளவர்களுக்காக இங்கே இருக்கிறது. நீர் இரக்கமாயிருப்பீரா-? ஒவ்வொருவரையும் நீர் சுகமாக்கும்படியாக நான் ஜெபிக்கிறேன். கர்த்தாவே இவைகள் அடையாளங்கள் மாத்திரமே, அங்கே கல்வாரியில் சுகமாவதற்கான அந்த கிரயமானது ஏற்கனவே செலுத்தப்பட்டாயிற்று. எங்களுடைய மீறுதல்களுக்காக நீர் காயப்பட்டிருக்கின்றீர், கல்வாரியில் உம்முடைய தழும்புகளால் நாங்கள் சுகமானோம். ஆனால் உம்மை நேசிக்கின்ற உம்மை விசுவாசிக்கின்ற எங்களுக்கு இவைகள் விசுவாசத்தின் சிறிய அடையாளங்களாக இருக்கின்றன. ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கின்றோம், நீர் கூறியபடியே "நாங்கள் சொஸ்தமடையும் படிக்கு, எங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர்

ஜெபம் பண்ணுகிறோம்" பிதாவே, இதில் இங்கு இருக்கின்ற இந்த சிறிய உறுமால்களையும் மற்ற சிறிய பொருள்களையும், தேவை உள்ளவர்களுக்கு நான் அனுப்பி நீர் அவர்கள் ஒவ்வொருவரையும் சுகமாக்கும்படியாக உம்முடைய குமாரன் கர்த்தராகிய இயேசு நாமத்தில் ஜெபிக்கின்றேன், ஆமென்.

7. அந்த சிறிய அடையாளங்களில் எங்களுக்கு செய்யப்பட்ட அநேக காரியங்கள் இருக்கின்றன. ஒரு வாரமோ அல்லது முன்போ அலுவலகத்திலிருந்து ஏறக்குறைய ஒரு ஆயிரத்தை வெளியில் நான் அனுப்பி வைத்தேன். உறுமால்களை வைப்பதன் மூலமாக அநேக காரியங்கள் செய்யப்பட்டு உள்ளது. கர்த்தர் இவ்வாறாக அதை ஒரு அற்புதமான விதத்தில் ஆசீர்வதித்தார். சாட்சிகள், வியாதியஸ்தர்கள் மீது உறுமால்களை வைக்கின்ற இந்த பெலவீனமான முயற்சிகளின் மூலமாக நமது கர்த்தர் என்ன செய்தார் என்ற சாட்சிகள்.

அங்கே உறுமால்களில் வல்லமை இல்லை என்பதையும், ஒரு துண்டு துணி மட்டுமே என்பதையும் நீங்கள் அணிந்து கொண்டிருக்கிற பழைய துணியைக் காட்டிலும் அதிகமானதல்ல என்பதையும் நாங்கள் அறிந்தே இருக்கின்றோம். ஆனால் அது - அது வேத வாக்கியங்களைப் பின்பற்றி செய்யப்படுகின்றன ஏதோ ஒன்றாகவே இருக்கிறது.

8. இங்கே, சில காலத்திற்கு முன்பு கீழே இருக்கும் லூசியானாவில், சில சிறிய நகரத்திற்கு, ஒரு சிறிய சபைக்கு கூட்டங்களை நடத்த இங்கே இந்த மேடையில் இருக்கும் சகோதரன் மூரும் நானும், நாங்கள் கீழே வழியில், கீழே சென்று கொண்டிருந்தோம். மேலும் அவருடைய அன்பு மகள் மற்றும் மனைவி மற்றும் அவர்கள் அனைவரும் கூடவே

இருந்தனர். நான் - அநேக, அநேக வருடங்களுக்கு முன்பு கலிபோர்னியாவில் சில மக்கள் கொடுத்த உடைகளை எடுத்துச் செல்லும் கைப்பெட்டியை வைத்திருந்தேன், மேலும் எனக்கு ஒரு புதிய சூட்டையும் நான் வாங்கியிருந்தேன். அதை நான் அந்த கைப்பெட்டியில் வைத்திருந்தேன் மற்றும் பழையது ஒன்றையும் வைத்திருந்தேன். மேலும் அவர் அதை அவளுடைய வாகனத்தின் மேல் பகுதியில் வைத்து லூசியானாவினூடாக வேகமாக ஓட்டினார். நாங்கள் கீழே இறங்கிய உடனே, கைப்பெட்டியானது மேல்பகுதியில் இல்லை என்பதை நாங்கள் கண்டறிந்தோம்; அது போய் விட்டது. எனக்கு சட்டைப்பையில் ஒரு கைக்குட்டையும் கூட இல்லாதிருந்தது. ஆகையால் அவர் மிகவும் தைரியம் இழந்திருந்தார். ஆகையால், "ஓ, கர்த்தர் அதை கவனித்துக் கொள்வார்" என்று நான் கூறினேன்.

என்னுடைய ஆடைகள் அனைத்தும், முழுவதுமாக அதற்குள் தான் இருந்தது, அதுவுமல்லாமல் என்னுடைய உடுப்புக்கு மேலே அணியும் ஆடைகளும் வீட்டில் இருந்தன. எனவே "சகோதரன் பிரன்ஹாம், நான் வெளியில் சென்று ஒரு புதிய சூட்டை வாங்குகிறேன்" என்று அவர் கூறினார்.

"இல்லை, அது எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது" என்று நான் கூறினேன்.

"சகோதரன் பிரன்ஹாம், உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை" என்று அவர் கூறினார். அங்கே நெடுகிலும் அந்த சாலையில் வரும் வழியில் அது காணாமல் போனது" என்றார். மேலும், "இவ்வாறு... இந்த வழியினூடாக கறுப்பு நிற மனிதர்கள் அநேகர் வசிக்கின்றனர்" என்றார். மேலும், "இப்பொழுது, முதலாவது காரியம்" என்றார். சில மனிதன் வழி நெடுகிலும் வந்து அந்தப் கைப்பெட்டியை அவன் கண்டுபிடித்தால்..." என்றார்.

“என்னுடைய வேதாகமும் அங்கே அதனுள்ளே இருக்கிறது, அதில் என் பெயரும் இருக்கிறது” என்று நான் கூறினேன்.“நல்லது சகோதரன் பிரன்ஹாம், அவன் கைப்பெட்டியை கண்டுப் பிடிப்பானேயானால்”, “அவன் செய்யும் காரியமானது அந்த சூட்டுகளை விற்றுவிடுவதாகவே இருக்கும்,” என்றார். மேலும் அவ்வாறே மற்றவைகளும் அதைப் போன்று தான்.

“நல்லது, என்னைப் போன்றே அது அவனுக்கும் கண்டிப்பாக தேவைப்படலாம் என்று நான் கூறினேன். காரணம் என்னவென்றால் தேவன் அவைகளை எனக்கு கொடுத்தார், எனவே கண்டிப்பாக அவனுக்கு அவைகள் தேவையாக இருக்கலாம்; கர்த்தர் அவைகளை அவனுக்கு கொடுக்கின்றார்.

“நல்லது, அவன் என்னுடைய வேதாகமத்தை கண்டு பிடித்தால், அவன் என்னை அறிந்து இருந்தால்” என்று அவர் கூறினார்.“எவ்வாறாயினும் அவன் அதைத் திரும்பவும் கொண்டு வருவான்" என்று நான் கூறினேன்.

“ஓ, இல்லை சகோதரன் பிரன்ஹாம்” “ஒரு பாவி அதை கண்டு பிடித்தால்," அவன் அந்தத் துணிகளை விற்று விடுவான்," என்றார். "அதை ஒரு கிறிஸ்தவன் கண்டு பிடித்தால், அவர்கள் அதை அந்த சூட்டுகளை வெட்டி, ஜெபத்துணிகளுக்காக அவைகளை ஒருவருக்கொருவர் அனுப்பி விடுவார்கள்," என்றார். "ஒரு சந்தர்ப்பமும் உங்களுக்கு கிடைக்காது" என்றார். எனவே, “நல்லது, நாம் கர்த்தரை மட்டும் அப்படியே நம்புவோம்," என்று நான் கூறினேன்.

9. இரண்டு நாட்கள் கடந்து, அங்கே இருந்த, சகோதரன் பிரவுன், “இதன் மீது நானும் கூட விரும்புகிறேன், நான்,

முற்றிலுமாக சில புதிய சூட்டுகளை உங்களுக்கு வாங்க விரும்புகிறேன்" என்று அவர் கூறினார். "இல்லை எப்படியாவது கர்த்தர் அவைகளைத் திரும்பவும் கொண்டு வருவார் என்று நான் கூறினேன்.

எனவே நாங்கள்... இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்றது, "நீங்கள் பார்த்தீர்களா", என்று அவர் கூறினார். "அங்கே கீழே ஒரு காவலரை நாங்கள் சந்தித்தோம்" என்றார். "நிச்சயமாக, அதைப் பார்ப்பதற்காகவே நான் சாலையில் மேலே செல்லுவேன்" என்று அவர் கூறினார். அவருடைய தாயார் எனது கூட்டத்தில் சுகமடைந்தவராக இருந்தார். "நிச்சயமாக" என்று அவர் கூறினார். மாநில காவலர்களில் ஒருவர், அங்கே மேலே, மேல் செல்லும் வழியில் சதுப்பு நிலங்களுக்குள்ளாக, ஓ, சாலையின் மேலும் கீழுமாக ஒரு நூறு - இருநூறு மைல்கள், முந்நூறு மைல்கள் இருக்கும், ஏதோ ஓரிடத்தில் அந்த கைப்பெட்டியை நாங்கள் தொலைத்து விட்டோம் என்று நாங்கள் அவரிடம் கூறினோம்.

எனவே பிறகு அடுத்த நாள், நாங்கள் திரும்பவும் சென்றோம். எவ்வாறாயினும் ஒரு சூட் உடைகளை நான் பெற்றுக் கொள்ளப் போகிறேன் என்பதில் சகோதரன் ஜாக் அப்படியே விடாப்பிடியாக இருந்தார்.

பையனே, வீட்டிலிருந்து ஒரு ஆயிரம் மைல்கள், வீட்டிலும் துணிகள் இல்லை, இங்கேயும் ஒன்றுமே இல்லை" என்று அவர் கூறினார். "என்னே, ஒரு தூய்மையான மேல் சட்டையோ அல்லது ஒரு கைக்குட்டையோ கூட இல்லாமல் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்-? " என்று கேட்டார். "நல்லது, கர்த்தர் அதை கவனித்துக் கொள்வார்" என்றேன்.

10. எனவே நாங்கள் திரும்பவும் சகோதரன் பிரவுனிடத்தில் சென்றோம், மேலும் அவர்கள் - சகோதரன்

பிரவுன், அவர் வெளியில் வந்து, ஒரு சூட் உடைகளை வாங்க என்னை தயார் செய்யப் போகிறார். சகோதரன் பிரவுன் வெளியே வந்த கொஞ்ச நேரத்தில், தொலை பேசியானது ஒலித்தது, அது அந்த நன்கு தெரிந்த கருப்பு நிற சகோதரனுடைய அழைப்பாக இருந்தது, மேலும், "அங்கே சகோதரன் பிரன்ஹாம் இருக்கின்றாரா-?" என்று கேட்டார். "நான் போகும் வழியிலேயே அவருடைய பெட்டியை நான் கண்டு பிடித்து விட்டேன்" நான் வழியிலே இருக்கிறேன் என்று கூறினார். ...கர்த்தரில் விசுவாசம் வையுங்கள், ஆமென். அது எதுவாக இருந்தாலும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக ஆகும் போது நீங்கள் இவ்வாறாக இழந்து போக முடியாது. அப்படியே அவர் மேல் நம்பிக்கை வையுங்கள். மேலும் பாதையானது எந்தவிதமாகச் சென்றாலும் உங்களுடைய துடுப்புகளை அவருடைய ஆவியை நோக்கி அப்படியே அமைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களை துறைமுகத்திற்குள் வழி நடத்துவார். அது எல்லாமே சரியாகத்தான் இருக்கும்.

11. இப்பொழுது, உங்களிடம் வேதாகமம் இருக்குமானால் யோபுவின் கீழாக குறித்து வைத்து இருப்பவர்கள், அப்படியே ஒரு சில நிமிடங்களுக்கு, இன்றிரவு பரிசுத்தாவியானவர் மிகச் சரியாக என்ன செய்வார் என்று தெரியாமல்... ஒவ்வொரு இரவும், அவர் கிரியை செய்யும் விதத்தை நாங்கள் அறிந்து கொள்ள முடியவில்லை. அவருடைய அதிசயங்களை நிகழ்த்து வதற்கு ஆராய்ந்து அறிந்து கொள்ள முடியாத வழிகளிலேயே அவர் கிரியை செய்கிறார்.

இப்பொழுது, 25-வது வசனத்தில், நாம் இவ்விதமாக வாசிக்கலாம்.

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவைகள் அழுகிப் போன பின்பு, என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். (யோபு 19:25-26)

வேதாகமத்தில் மிகப் பழமையான யோபுவின் புத்தகமானது மோசே ஆதியாகமத்தை எழுதுவதற்கு முன்பே எழுதப்பட்டதாக வேதாகமத்தின் பழமையான புத்தகமானது என நம்பப்படுகிறது. ஆனால் மீட்பானது தூரமாக இருந்த போதிலும் - அந்த வழியில் முன்பாகவே வேதாகமத்தின் மிகப்பழமையான புத்தகமானது மீட்டைப் பேசிக்கொண்டு இருந்தது. வேதாகமத்தில் மீட்பானது மிகப்பழமையான காரியங்களில் ஒன்றாகவே இருக்கிறது. மீட்பின் திட்டமானது திட்டம் இடப்பட்டிருந்தது என்று உங்களுக்குத் தெரியுமா-? அதைப் பற்றி சிந்தியுங்கள். அவர் உலகத்தை உண்டாக்குவதற்கு முன்பாகவே, தேவன் முன்னதாகக் கண்டு, ஒரு மீட்பின் பாதையை உருவாக்கினார். கிறிஸ்துவானவர் உலகத் தோற்றத்திற்கு முன்பே அடிக்கப்பட்ட தேவாட்டுக் குட்டியாக முன்குறிக்கப்பட்டும் முன் நியமிக்கப்பட்டும் இருந்தார் என்று வேதாகமம் வெளிப்படையாகக் கூறுகிறது. அது சரியே. உலகமானது உண்டான பாதையின் முன்பே, தேவன் ஒரு மீட்பின் திட்டத்தை உடையவராக இருந்தார்.

12. உடனே சாத்தான்... அந்த பழைய - தர்க்கத்தை நீங்கள் அறிவீர்கள்; அதில் ஏதேனும் ஒன்றையாவது வைத்துக் கொள்ளாமல், ஏன் இந்த எல்லாவற்றையும் தேவன் தவிர்க்க முடியவில்லை-? ஆனால் தேவன் சாத்தானை ஏறத்தாழ தம்முடன் சரிசமமாகவே வைத்துக் கொண்டார், தேவனுடைய காரியங்களை சாத்தான் எடுத்துக் கொண்டு அவைகளை

பொல்லாத சிந்தனைகளாக தாறுமாறாக்கினான் அங்கிருந்து காரியங்கள் நன்மைக்குப் பதிலாக பொல்லாதவைகளாகத் தொடங்கியது. முதல் காரியமானது செய்யப்பட்ட உடனேயே, தேவன், அவருடைய மகத்தான அன்பின் பொக்கிஷ பெட்டகத்திலிருந்து, அவ்வளவு விரைவாக அவர் ஒரு மீட்பின் திட்டத்தை உடையவராக இருந்தார்.

இது எவ்விதமாக இருந்திருக்கக் கூடும் என்று கீழே அமர்ந்து இவைகள் அனைத்தையும் சிந்தித்து பார்க்க வேண்டாமா-? அவர் தேவனாகவும் எல்லையற்றவராகவும் இருக்கிறார். அது எவ்விதமாக இருக்கும் என்று அவர் அறிந்திருந்தார். இது சம்பந்தமாக அவர் எல்லாவற்றையும் எவ்விதமாகக் கொண்டு வர வேண்டும் என்பது அவருடைய மகத்தான இருதயத்தில் இருந்தது. அதன் பிறகு அவர் சபையை முன்னறிந்தும் கிறிஸ்துவை முன்னறிந்தும் அந்த திட்டத்தை முன்னறிந்தும் அந்த உலகமானது முடிவடைவதையும்... (முன்னறிந்து)இருப்பாரானால், அது எல்லாவற்றையும் ஒழுங்குக்குள்ளாக்கி இருப்பார். நீங்கள் உங்களுக்கு மரித்தவர்களாகி, கிறிஸ்துவுக்குள் மரித்து உயிரோடிருக்கிறீர்கள், நீங்கள் உங்களுக்கு மரித்தவர்களான பிறகு, கிறிஸ்துவுக்குள் உயிரோடிருக்கிறீர்கள், அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு தேவன் சகலத்தையும் நன்மைக்கேதுவாகவே செய்து முடிக்கையில், நீங்கள் எப்படி இழந்து போக முடியும்-? நீங்கள் அப்படி இழந்து போகவே முடியாது; அங்கே இழந்து போக வழியே இல்லை.

13. சபை அதை அப்படியே உண்மையிலேயே கண்டுபிடிக்க முடியும். கிறிஸ்துவுக்குள் உங்கள் ஸ்தானத்தை நீங்கள் கண்டுபிடிக்கக் கூடுமானால் பிறகு இந்த மற்ற எல்லாக் காரியங்களும் அப்படியே ஒரு நிழலைப்போன்று மங்கிப் போய்விடும். தேவனிடத்தில் உண்மையாய் வருகிற

ஒவ்வொருவரும் நிழல்களையும் சோதனைகளையும் பயங்களையும் இன்னும் மற்றவை களையும் உடையவர்களாக இருக்க வேண்டும். ஆனால் அது சம்பந்தமாக அப்படியே பாதிப்படைய கூடாது. இயேசு வரும் போது கடைசி நாட்களில் வெளிப்படப் போகிற தேவனுடைய மகிமையை அறிந்தவர்களாக நாம் அவரைப் போலவே இருப்போம் என்கிற போது ஒரு கொஞ்ச காலத்திற்கான, ஒரு கொஞ்சம் பாடுகள் எம்மாத்திரம்-? அவர் அப்படியே சகலத்தையும் சேர்ந்தாற் போல நடப்பிக்கிறார். ஒருவேளை நீங்கள் வியாதியாய் இருந்தோ அல்லது உங்களுக்கு ஏதோவொன்று சம்பவிக்குமானால், இவ்வாறாக உங்களை அவருக்கு ஒரு சிறிய நெருக்கமாகக் கொண்டு வருவதற்கு தேவன் அதைச் செய்ய வேண்டியவராக இருக்கின்றார், என்பதை நீங்கள் அறிவீர்களா-?

14. ஒரு முறை அது சொல்லப்பட்டது, நீங்கள் அறிவீர்கள்; இது நம்பத்தக்கதா, இல்லையா என்று எனக்கு தெரியாது. பாலஸ்தீனாவில் - அங்கே அந்த மிஷனரி என்னிடம் கூறினார். இருந்தாலும் ஒரு ஆடு மேய்ப்பவன் அந்த செம்மறி ஆட்டுடன் வந்து கொண்டிருந்ததை அவர் பார்த்ததாக அவர் கூறினார். ஒரு செம்மறி ஆட்டை, அவர் சுமக்க வேண்டும், மேலும் அதன் காலின் மீது ஒரு எலும்பு முறிவில் வைத்துக் கட்டும் சிம்பு அல்லது சிராய் இருந்தது என்று கூறினார். மேலும், ஐயா இந்த செம்மறி ஆடு கீழே விழுந்து அதன் கால் காயம்பட்டதா-? என்று அவர் கேட்டார்.

“இல்லை” என்று அவர் கூறினார்.“அதன் கால்களுக்கு என்ன ஆயிற்று-? ” என்று கேட்டார்.“அதை நான் உடைத்தேன்”, என்று கூறினார்.“அதை உடைத்தது நீயா-? ” என்று கேட்டார்.“அதைச் செய்வதற்கு நீ ஒரு கொடூரமான

ஆடு மேய்ப்பவனாக இருந்திருக்க வேண்டும்” என்று கூறினார்.

“இல்லை”, என்று அவர் கூறினார்.“பாருங்கள், இந்த செம்மறி ஆடு என்னை பொருட் படுத்தாமல் வழி தவறிச் சென்று கொண்டிருக்கிறது. மேலும் அது கொல்லப்படபோகிறது" என்று நான் அறிந்து கொண்டேன். ஆகையால் அதை என்னுடன் கொண்டு வருவதற்காகவும் அப்படியே ஒரு விஷேசித்த கவனிப்பும், அதற்கு என்னுடைய கரங்களில் இருந்து உணவளிக்கவும், அதின் காலை நான் உடைக்க வேண்டியதாயிற்று. மேலும், அது தான், அது என்னை அதிகமாக நேசிக்க வைத்து,” என்று அவர் கூறினார்.

ஆகையால் சில சமயங்களில் அப்படியே சின்னதாக ஒன்று உங்களுக்கு சம்பவிக்கும் படியாக தேவன் விட்டு விடலாம், இவ்வாறாக அவர், உங்களை அவரிடம் ஒரு கொஞ்சம் நெருக்கடி அப்படியே கொண்டு வரவும், உங்களை கொஞ்சம் அதிகமாக நேசிக்கவும், பிறகு ஒரு சிறிய விஷேசித்த கவனிப்பையும் ஒரு சுகத்தையும் உங்களுக்குக் கொடுக்கவும் முடியும். நீங்களும் “ஆம், கர்த்தாவே, நீர் இருக்கிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன்,” என்று கூறுவீர்கள். பார்த்தீர்களா-? அது தான் அது. தேவன் அதை எப்படி செய்கிறார் என்று பாருங்கள்-? அவர் அற்புதமானவராக இருக்கிறார் இல்லையா-? நாம் அவரை அவ்வாறாகவே விசுவாசிப்போம்.

15. மீட்பு ஒரு மனிதனால் முடியவில்லை என்றால்... மீட்பு என்றால் திரும்ப கொண்டு வரப்படுதல்”.அது பழமொழி போன்றது. நீங்கள் கீழே சென்று... உங்களுக்கு தெரியும், ஒரு அடகு பிடிப்பவன், மூன்று கோளவடிவமான உருண்டைகளை தன்னுடைய முன்பக்கத்தில் தொங்க

விட்டுக் கொண்டிருப்பதை நான் பார்க்கின்ற ஒவ்வொரு முறையும் அது என்னை சிந்திக்க... இப்பொழுது இங்கே ஒரு அடகு பிடிப்பவனும் இங்கே இல்லை என்றே நான் நம்புகிறேன்; இங்கே யாராவது இருக்க கூடுமானால், ஐயா, இதற்கு நான் உங்களைக் குறிப்பிடவில்லை. அது பிழைப்புக்கு நீங்கள் உண்டாக்கிக் கொள்ளும் ஒரு வழியாக இருக்கிறது. அது சட்டப்பூர்வமானது என்று நான் எண்ணிக் கொள்கிறேன். எல்லாரையும் போன்று நீங்களும் செய்வதற்கு உங்களுக்கு அதிக உரிமை இருக்கிறது.

ஆனால் ஒரு அடகு பிடிப்பவனை எனக்கு எப்பொழுதுமே நினைவுபடுத்தும்... நீங்கள் அறிவீர்கள், அந்த பிசாசு நம்மை அடகுக்கடையில் வைத்து விட்டான், ஆனால் கிறிஸ்துவோ நம்மை மீட்டு விட்டார். பார்த்தீர்களா-? அவன் நம்மை அடகுக் கடையில் வைத்தான், ஆனால் கிறிஸ்துவோ வந்து கிரயத்தை செலுத்தினார், நாம் விடுதலையானோம். அவரும் அது போன்று உள்ளே புகுந்து வந்து பிசாசின் அடகுக் கடையிலிருந்து நம்மை மீட்டார்.

உங்களுக்குத் தெரியும் அதின் தொல்லையானது, ஜனங்கள் அதை உணராமல் இருப்பது தான், விடுதலையாவதற்கு நீங்கள் ஏதோ ஒன்றைச் செய்யவேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர். நீங்கள் ஏற்கனவே ஒரே காரியமானது நீங்கள் அதைப் பற்றி அறிந்து கொள்வது தான். "நல்லது, சகோதரன் பிரன்ஹாம், அங்கே ஏதோ ஒன்று நான் செய்ய வேண்டுமே நான்..."

இல்லை ஒரு காரியத்தைக் கூட நீங்கள் செய்யக்கூடாது. நீங்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள். பாருங்கள், பாருங்கள்-? நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுமேயில்லை. அங்கே நீங்கள் செய்யவேண்டிய ஒரு காரியமோ, எதற்காவது கிரயம் செலுத்த வேண்டியதோ இல்லை, அதை

ஏற்றுக்கொள்வது தான் நீங்கள் செய்யக்கூடிய ஒரே காரியமாக இருக்கிறது.

16. ஒரு சமயம், ஒரு விவசாயி இருந்தான்; அவனுடைய வயலில் காகங்கள் இருந்தன; அவைகள் தெற்கில் சென்று கொண்டிருந்தன. மேலும் அவனுடைய வயலில் காகங்கள் வந்து சோளத்தையும் இன்னும் மற்றவைகளையும் கொத்திக் கொண்டிருந்தது. மேலும் அவன் ஒரு கண்ணியை வைத்து ஒரு காகத்தைப் பிடித்தான். அப்படியே அவன் அந்த வயதான ஒன்றை, காலைக் கட்டினான், அங்கே மேலே அதைக் கட்டி, மற்றவைகளை பயமுறுத்தி துரத்துவேன் என்றான்.

மேலும் மற்ற காகங்கள் அதைக் கடந்து பறக்கையில் "ஜானி காகமே, சீக்கிரம் என்று உற்சாகமூட்டி, புயல்களும், குளிரும் வந்து கொண்டிருக்கின்றன, நாம் தெற்கே போவோம் என்று கூறியது.

மேலும் ஜானி காகமானது நகருவதற்கு முயற்சித்தது, அதனால் இயலவில்லை. அது கட்டப்பட்டிருந்தது. எனவே ஒரு நாள் அங்கே இரக்கமுள்ள இருதயத்தையுடைய ஒரு நபர் அப்பக்கமாக கடந்து போனார். பரிதாபமான வயதான காகமானது ஏறக்குறைய அது பட்டினியினால் சாகவும் மேலே எழும்ப இயலாமலும் இருந்தது. "அந்த பரிதாபமான பறவைக்காக நான் வருந்துகிறேன்" என்று அவன் கூறி, அவன் இவ்வாறாக அங்கு சென்று அந்தக் கட்டை அறுத்து, காகத்தை அவிழ்த்து விட்டார். ஆனால் நீங்கள் அறிவீர்கள், அது நீண்ட நாட்களாக கட்டி வைக்கப்பட்டு இருந்தபடியால் அது இன்னமும், கட்டப்பட்டிருப்பதாகவே நினைத்துக் கொண்டிருந்தது.

“ஜானி காகமே, துரிதமாக என்று உற்சாகமூட்டி, நாம் தெற்கே போகலாம் அந்த தெற்கு காற்றானது வீசிக் கொண்டிருக்கிறது” என்று அந்த காகங்கள் கடந்து போகும் போது, சத்தமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த வயதான காகமோ பின்பாகக் கூப்பிட்டு, “என்னால் இயலவில்லை, ஏனென்றால் நான் இன்னும் கட்டப்பட்டுத் தான் இருக்கிறேன்,” பாருங்கள், அது விடுவிக்கப்பட்டும் அதை அந்த விடுதலையை அது அறியாதிருந்தது.

17. மேலும், இன்றிரவு அநேக மக்கள் அந்தவிதமாகத் தான் இருக்கின்றனர். அந்தப் பெண்களும் அல்லது கடந்த இரவு சக்கர நாற்காலிகளில் இங்கு அமர்ந்து கொண்டு இருந்த யாராக இருந்தாலும், அவர்கள் அந்த நற்செய்தியைக் கேட்டனர். இன்றிரவு அந்த சக்கரநாற்காலிகள் இங்கே இல்லை. அவர்கள் அநேகமாக அங்கே பார்வையாளர் மத்தியில் வெளியே அமர்ந்து இருக்கின்றனர். பார்த்தீர்களா-? அவர்கள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றார்கள், எல்லாக் காலத்திலும் அவர்கள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றார்கள். கல்வாரியில் இயேசு அவைகளை வெட்டி அவிழ்த்து இருக்கிறார், அவருடைய சரீரத்திலிருந்து இரத்த ஆறு வெளியேறி ஒவ்வொருவரையும் வியாதியிலிருந்து விடுதலையாக்கிற்று.

கடந்த இரவு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அந்த பாவிகள், கடந்த இரவு பாவத்தின் சங்கிலியின் கீழாகக் கட்டப்பட்டு உட்கார்ந்து கொண்டு இருந்தனர். இன்றிரவில் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்ற; அடக்கு முறையிலிருந்து விடுதலை என்ற பிரகடனத்தை அவர்கள் கேட்ட பிறகு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அந்த சுதந்தரத்தில் களிகூர்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

18. மேலும், அந்த அடிமைத்தன காலத்தில், அடக்கு முறையிலிருந்து விடுதலை பிரகடமானது. கையெழுத்திடும் முன்பு, ஏன் தெற்கில் அடிமைகள் மலையின் மேல் ஏறுவார்கள் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். அவர்கள் - அவர்கள் சூரிய உதயத்தில் அவர்களது விடுதலையானது இருக்கப் போகிறது. சிலர் முயல - மற்றவர்களைப் பார்க்கிலும் சற்று உயரமாக ஏற முயலுவார்கள். அந்த வயதானவர்களால் அந்த மலையின் உச்சிக்கு சென்று விடுவார்கள். அவர்கள் அந்த சூரியனைப் பார்த்த மாத்திரத்திலேயே, அவர்கள் விடுதலை அடைந்து விட்டனர். எனவே அதிக உயரத்திற்கு சென்றவர்கள் சூரியன் சற்று மேலே எட்டிப் பார்த்த உடனேயே, "நாம் விடுதலையானோம்" என்று அவர்கள் கூறுவார்கள். அடுத்த குழுவுக்கு அதை சத்தமிட்டுச் சொல்வார்கள், அந்த அடுத்த ஒன்றுக்கு சத்தமிட்டுச் சொல்வார்கள். "நாம் விடுதலையானோம்", "நாம் விடுதலையானோம்" என்ற இந்தச் செய்தியானது மலையடிவாரத்திற்கு ஒருவர் மூலமாக இன்னொருவருக்கு கடந்து செல்லும். குமாரன் விடுதலையோடு இருக்கிறார் என்று ஒவ்வொரு மனிதனும் பார்க்கின்றனர். நான் என்ன பொருளில் குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்கு தெரியும்.

நீங்கள் குமாரனைப் பாருங்கள். தேவன் உங்களுக்கு அவரை வெளிப்படுத்தின வெளிப் பாட்டின் வழியில் அவரைப் பாருங்கள். தேவன் தம்மை உங்களுக்கு வெளிப்படுத்தும்போது, அந்த ஒரே வழியில் தான் நீங்கள் எப்பொழுதுமே அறிந்துகொள்ள முடியும். அது தான் எல்லா வேத வசனங்களின் அடிப்படையாக இருக்கிறது.

"மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, ஆனால் பரலோகத்தில் இருக்கிற

என் பிதா இதை வெளிப்படுத்தினார். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன், அது சரியாக இருக்கிறதா-? ஆகையால் அது இயேசு கிறிஸ்துவின் ஆவிக்குரிய வெளிப்பாடாக இருக்கிறது. அங்கே தான் அவர் அவருடைய சபையைக் கட்டினார்.

19. இப்பொழுது, அது இந்த விதமாகத்தான் இருந்திருக்கலாம் என்று அங்கே, முன்பு அந்த சிறிய பழங்காலத்தவர் உணர்ந்திருக்கக் கூடும். விசுவாசத்தினால் அவர்கள் முழு மீட்பின் காலத்தையும் பார்த்திருப்பார்களானால், விழுந்து போக முடியாத மீட்பின் நிரூபனத்தை முற்றிலுமாக அறிமுகப்படுத்திய ஜனங்களை அவர்கள் பார்த்திருக்கக் கூடும். மேலும் முடிவையும் மேலும் விட்டுவிடு.... விடுதலையாவதற்கு விருப்பமில்லாமல் விடுவிக்கப்பட்ட அந்த நபர் அது தான் அந்த சோகப்பகுதி.

இப்பொழுது ஏதேன் தோட்டத்தில் ஆதாம், அவன் முதலாவதாக பாவம் செய்த போது, அவன் பாவம் செய்த உடனயே, சீக்கிரத்தில் உடனடியாக, அவனுக்காக ஒரு மீட்பின் வழியை உடையவராக தேவன் இருந்தார். தேவன் ஒரு மீட்பின் வழியை உருவாக்கி இருந்தார். ஆதாம் பிதாவோடு திரும்பவும் எந்த சமயத்திலும் ஐக்கியம் கொள்ள அணுகும் முன்பாகவே, தேவன், ஒன்றுமறியாத ஆட்டுக்குட்டியையோ அல்லது செம்மறி ஆட்டையோ அடிக்க வேண்டியதாகி, அவனுக்கு ஒரு ஆடையை உருவாக்கி அவன் சுற்றி அணிந்து கொள்ளவும், திரும்பவும் அவருடைய பிரசன்னத்திற்குள்ளாக வருவதற்கு ஆதாம் திரும்பவும் மீட்பின் மீட்பின் கம்பளத்தின் மீது நடப்பதற்கு வரவேற்பு கம்பளத்தை வெளியில் விரித்தார். தேவன் எப்பொழுதுமே ஒரு மீட்பின் திட்டத்தையும், அது இரத்தத்தின் மூலமாகவும் உலகமானது உண்டாவதற்கு

முன்னமே, மிக ஆரம்பமும், காலத்தோற்றமும், முதல் கொண்டே தேவனுடைய சிந்தையில் தெரிந்து கொள்ளப்படுகிறது.

20. இப்பொழுது, ஆதாமும், ஏவாளும் நம்முடைய முதல் தகப்பனும், தாயும், அவர்கள் தங்கள் யாத்திரை முடிவடைய ஏற்படுத்தப்பட்ட நித்திய இடத்தின் வார்த்தைகளைப் பெற்ற பிறகு, ஏதேன் தோட்டத்திற்கு வெளியில் நடக்க ஆரம்பித்த உடன், ஏன் தெளிவின்றி அந்த பாவமானது அவர்கள் புருவங்களுக்கு மேல் அல்லது நெற்றிக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்து. இருண்ட மேகங்களும் அவர்களை சுற்றிலும் தொங்கிக் கொண்டிருந்து. அவர்களைச் சுற்றி இரத்தம் தோய்ந்த செம்மறியாட்டுத் தோல்களோடு அவர்கள் வெளியே நடந்து சென்றனர். அவர்களுக்கு ஒரு நம்பிக்கையின் கதிர் இருந்தது. அது மந்தாரமான இருண்ட, ஏனென்றால் வருத்தத்தின் கண்ணீரானது அவர்களின் பாவத்தின் பாவங்களில் இருந்து, அவர்கள் கன்னங்களில் வடிந்து. மேலும் அவர்கள் தங்கள் பாவத்திற்கு வருந்தினார்கள், ஆனால் அங்கே எங்கேயோ ஒரு மீட்பு இருக்கலாம் என்று அவர்கள் - அவர்கள் அறிந்திருந்தனர், ஏனென்றால் "அவள் வித்துக்கும் அந்த சர்ப்பத்தின் வித்துக்கும் இடையே நான் பகையை வைப்பேன்" என்று அவர் கூறியிருந்தார்.

அவர்கள்...அனேக ஜனங்கள், 23-ஆம் சங்கீதத்தை மேற்கோள்காட்டி "நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும்" என்று கூறுகிறார்கள். அது இருண்ட பள்ளத்தாக்கு என்று சொல்லவில்லை; நிழல்களின் பள்ளத்தாக்குகளின் ஊடாக.. என்று அது கூறுகிறது. மேலும் அது இருளாக இருக்குமானால், அங்கே நிழல் இருக்காது.

நிழலை உருவாக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவில் ஒளியை அது எடுத்துக் கொள்கிறது.

21. எனவே மரணமானது, அந்த மிக ஆரம்பத்திற்கு பிறகு ஒருபோதும் ஒரு முழுமையான இருள் இருக்கவே இல்லை. அது ஒரு நிழலாகவே இருந்தது. எனவே அங்கே குறிப்பிட்ட சதவிகிதத்தில் ஒளியானது இருந்திருக்க வேண்டும். மேலும் ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே நடந்து கொண்டிருந்த போது, அவர்களுக்கு முன்பாக மீட்பின் நிழல்கள் இருந்தது.

மோசேயின் பிரமாணத்தில் பலி செலுத்துவதில் உள்ள சம்பிரதாயங்களும் இன்னும் மற்றவைகளும் கூட பரிபூரண பலியின் வருகையும் தேவனுடைய பரிபூரண மீட்பின் திட்டத்தின் ஒரு நிழலாட்டமாகவே இருந்தது. மேலும் அவர்களால் அடிக்கப்படுகிற மிருகங்களின் பலிகளில் வடியும் இரத்தத்தின் மூலமாக அவர்கள் அந்தக் காரியங்களை முன்னறிகிற போது, அவர்கள் பாவங்களை மூடக்கூடிய ஒன்றாகவோ அல்லது அவர்கள் நடுவே போகக்கூடிய ஒன்றாகவோகத் தான் அது இருக்கிறது... அந்த நிழலில், அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் வருகையை முன்னறிந்தார்கள். இறுதி வரையிலும், மரண நிழல்களின் திசைகளில் இருக்கிறவர்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டு, உன்னதத்திலிருந்து அருணோதயம் தோன்றி, உதிக்கும் வரை அது அவ்விதமாகத் தான் இருந்து வந்தது. பாவத்தைப் போக்குவதற்கு தேவன் தாமே இங்கே இந்த பூமியின் மேல் வெளிப்பட்ட பிறகு தான் அவர்கள் முழுமையான மீட்பை தேவன் மூலமாகவே பார்த்தார்கள். உன்னதத்திலிருந்து அருணோதயம் தோன்றும் வரை.

22. இப்பொழுது, பழைய ஏற்பாட்டில் தேவகுமாரனின் வருகைக்கு மாதிரியாய் இருக்கிற அந்த நிழலின் கீழாக அந்த

பிரமாணங்களையும் மற்றும் மாதிரிகளையும், எவ்வாறாக தேவன் அந்தக் காரியங்களை அங்கே திரும்பவும் தருகிறார். உதாரணத்திற்கு மோசேயின் காலத்தில், ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்து அதை அப்படியே வைத்திருந்து, பத்தாவது நாள் அதை எடுத்து சோதிக்கும்படியாக பதினான்கு நாள் வரை அது வைக்கப்பட்டு, சுத்திரிக்கரிக்கப்பட்டு அந்த ஆட்டுக்குட்டியில் ஏதாவது குற்றம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கப்பட வேண்டும்...

எவ்விதமாக அந்த ஒன்றும் அறியாதது - அந்த குற்றவாளிக்காக மரிக்க வேண்டும் என்பதை பழைய ஏற்பாட்டில் மீட்பின் பிரமாணத்தில் நீங்கள் அறியலாம். எல்லா வகைகளிலும் இருந்து - ஏதேன் முதல் சிலுவை வரையிலும், எல்லா வழிகளிலும் இருந்து குற்றவாளிக்காக அந்த ஒன்றும் அறியாததே மரித்தது.

23. பழைய மீட்பின் பிரமாணங்களின் கீழாக உதாரணத்திற்காக கூறுகிறேன். ஒரு சிறிய கோவேறுக் கழுதையானது மேய்ச்சல் வெளியில் பிறந்தது. அந்த சிறிய கோவேறு கழுதையின் இரண்டு காதுகளுமே கிழிந்து தொங்கியது. மாறு கண்ணை உடையதாகவும் அடிப்பட்ட - முழங்கால்களையும், அதனுடைய வால் மேலே நீட்டிக்கொண்டும், ஒட்டிக் கொண்டும், பார்ப்பதற்கு என்னே ஒரு வித்தியாசமானதாக இருந்தது. "நல்லது, அம்மா, வீட்டு எஜமான் வெளியில் வரும் போது அவர் என்னை தலையில் அடிப்பார் என்று நான் எண்ணுகிறேன் என்று அந்த சிறிய ஒன்று தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டு அது கூறுமானால், நான் ஒன்றுக்கும் உதவாதவன் என்னால் எப்பொழுதுமே இயலாது ஏனென்றால் பாருங்கள் - பாருங்கள் நினைக்கும் போது என்னே ஒரு பார்ப்பதற்கு பயங்கரமாக நான் இருக்கிறேன்.

அவர்கள் தகுதியில்லை என்றும் அந்த விதமாகத்தான் ஜனங்கள் இன்னும் சிந்திக்க முயற்சிக்கின்றனர். நீங்களும் நாம் அனைவருமே தகுதி இல்லாதவர்களாகத் தான் இருக்கின்றோம். ஆனால் தாயானவள், மீட்பின் பிரமாணங்களில் நன்றாக போதிக்கப் பட்டிருப்பாளானால், "அன்பே பார், ஆசாரியன் உன்னை ஒருபோதும் பார்க்கவே மாட்டார், ஆனால் அந்த வீட்டின் மனிதர் குற்றமில்லாத ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்து அந்த ஆட்டுக் குட்டியானது கவனிக்கப்பட்டு அந்த ஆட்டுக்குட்டி கொல்லப்பட வேண்டும். அதனால் உன்னால் ஜீவிக்க முடியும்" என்று அவள் கூறுவாள்.

"அம்மா, இது எதனால்-? " என்று அது கேட்டது."ஏனென்றால் ஒரு பிறப்புரிமையின் கீழ் நீ பிறந்திருக்கிறாய்; நீ முதலாவதாக பிறந்தும் இருக்கிறாய்," என்று அது கூறியது.

24. இன்றைக்கும் அது அந்தவிதமாகத் தான் இருக்கிறது. நாம் குற்றமுற்றவர்களாகவும் தகுதியற்றவர்களாகவும் மரிக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். நாம் வாழ்வதற்குத் தகுதியற்றவர்களாகவும் இருக்கிறோம். கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கும் தகுதியற்றவர் களாகவும் இருக்கிறோம்; எதையும் கேட்பதற்கும் தகுதியற்றும் நாம் இருக்கிறோம். ஆனால் தேவனோ உங்களின் தகுதியின்மையை ஒரு போதும் பார்ப்பதே இல்லை; அவர் அந்த ஆட்டுக் குட்டியையே பார்க்கிறார். அவர் கிறிஸ்துவில் குற்றம் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், பின்பு நீங்கள் விடுதலையோடு இருக்கிறீர்கள். பார்த்தீர்களா-? உங்களுக்குப் பதிலாக அவர் மரித்தார். இப்பொழுது, அங்கே எந்தவிதமான குற்றமும் அவரிடம் இருக்குமானால், நீங்கள் இன்னும் விடுதலை அடையவில்லை. ஆனால், தேவன்

உங்களை பரிசோதிக்காமல்; அவர் அந்த ஆட்டுக்குட்டியைப் பரிசோதிக்கிறார்.

“இன்றிரவு சக்கர நாற்காலியை விட்டு நடப்பதற்கு நான் தகுதியில்லை” என்று நீங்கள் கூறலாம். நீங்கள் இல்லை தான், அது சரியே-! ஆனால் தேவன் உங்களை பரிசோதனை செய்யாமல்; அவர் கிறிஸ்துவைப் பரிசோதிக்கிறார். அவர் தகுதியாய் இருப்பாரானால், பின்பு உங்களால் நடக்க முடியும், பாருங்கள். அது சரியே. அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைச் சார்ந்தே இருக்கிறது.

சகோதரன் பிரன்ஹாம், நான் ஒரு பயங்கரமான ஸ்திரீயாக இருக்கிறேன்; நான் சட்ட விரோதமாக வாழ்ந்திருக்கிறேன். நான் செய்கிறேன் - நான் என்னுடைய திருமணப் பொருத்தனைகளைக் கூட முறித்திருக்கிறேன். நான் இதைச் செய்து உள்ளேன்...

“திரு பிரன்ஹாம் அவர்களே-! நான் ஒரு குடிகாரனாக இருந்திருக்கிறேன். நான் இதைச் செய்துள்ளேன். என்று நான் உங்களிடம் கூறுகிறேன்..."

நீ என்ன செய்தாய் என்று பிரச்சனை ஒன்றுமில்லை, தேவன் உங்களை ஒரு போதும் பார்ப்பதே இல்லை; அவர் அந்த ஆட்டுக்குட்டியையே பார்க்கிறார். அவர் ஏற்கனவே அந்த ஆட்டுக் குட்டியை ஏற்றுக் கொண்டு விட்டார். எனவே நீங்கள் விடுதலையாய் இருக்கிறீர்கள். தேவன் உங்களைப் பார்க்கவே முடியாது. அவர் உங்களுக்குப் பதிலாக மரித்த அந்த ஆட்டுக் குட்டியையே பார்க்கிறார். ஒரு நபர் சத்தமிடுவதற்கு அது போதுமானதாய் இருக்கிறது. அது அப்படி இல்லையா-? நிச்சயமாக இருக்கிறது. அந்த வார்த்தையின் அடிப்படையின் மேல் நீங்கள் அதை நினைக்கும் போது..

25. சத்தமிடுவதில் நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறீரா-? சற்று முன்பு நீங்கள் சத்தமிட்டுக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். நான் மிகவும் உணர்ச்சி வசப்படுபவனில்லை, நானே, அதை நம்புகிறேன் என்று நீங்கள் அறிவீர்கள். சில சமயங்களில் ஒரு சிறிய மதசம்பந்தமான ஒருவி தமான ஒரு சிறு உணர்ச்சியை நான் அடைந்து சற்று நிலைத்து விடக்கூடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் உங்களுக்குத் தெரியும், அதைக் கொண்டு, கிறிஸ்தவர்களின் இருதயத்தில் உள்ள சத்தமிடுதலையும் சந்தோஷத்தையும் அநேக மக்கள் குறை கூறுவதை அது எனக்கு நினைவுபடுத்தியது. நாம் சந்தோஷமாகத் தான் இருக்க வேண்டும். சந்தோஷமாக இருப்பது சம்பந்தமாக நாம் அதிகமானவைகளைப் பெற்றுள்ளோம். இந்த உலகத்தில் இருக்கும் யாராக இருந்தாலும் சந்தோஷமாகவே இருக்க வேண்டும், நாமும் இருக்க வேண்டும்.

26. அது ஒரு விவசாயியை என் சிந்தையில் கொண்டு வருகிறது. ஒரு முறை அவர் - அவர் சென்றார். அந்த அளவுக்கு அவர் ஒரு விவசாயியாக இருக்கவில்லை. அவருக்கு உயர்ந்த, பெரிய அருமையான தானியக்களஞ்சியங்கள் டிராக்டர்கள் நிறைய இருந்தன. மேலும் - ஆனால் அந்த நபர் வேலை செய்வதற்குக் கொஞ்சம் அதிக சோம்பலுள்ளவர். அவ்வளவு தான். அவன் எந்த வைக்கோலையும், உண்டு பண்ணவில்லை. இந்த சில பெரிய சபைகள், மற்றும் கீழே தோண்ட முடியாமலும் மற்றும் தேவனுடைய வார்த்தையை உண்மையாக எடுத்துக் கொள்ளாத வேத சாஸ்திரிகளையும் என் சிந்தையில் கொண்டு வந்தது. பெரிய சபைகளையும் மற்றும் நிறைய இசைக் கருவிகளையும் மற்றும் நிறைய சுத்திகரிப்பு அவைகளையும் அவர்கள் பெற்றுள்ளனர். ஆனால் அவர்கள்

அதைப் பொருட்படுத்துவதே இல்லை. எனவே, அவர்கள் - அவன் உழைப்பதும் இல்லை .

மேலும், அதிகமாக... அவனுடைய அயலகத்தானுக்கு அங்கே மேலே ஒரு சிறு தானியக்களஞ்சியம் இருந்தது. கால்நடைகளையும் மற்றும் பொருள்களையும் உள்ளே வைப்பதற்கு மிக அதிக அளவில் கால்நடைகளுக்கான தனிக்கொட்டில் அவனிடம் இல்லை. ஆனால் நிச்சயமாக அவன் கஷ்டப்பட்டு தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையில் உண்மையாக அவன் வேலை செய்து பெரிதாக உயர்ந்து, பெரிய ஆல்ஃபால்பா செடிகளை அறுத்து தனக்கிருந்த தானியகளஞ்சியத்தில் வைத்திருந்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

27. குளிர் காலம் வந்தது, அங்கே ஒரு சிறிய கன்று ஒவ்வொரு கொட் - தானியக் களஞ்சியங்களிலும் பிறந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த அடுத்த வசந்தகாலம், வசந்த கால காற்றுகள் வீச ஆரம்பித்தன. அவைகள் அந்த சிறிய கன்றுகளை வெளியே அனுப்பச் செய்தது. நல்லது, இந்தச் சிறிய கன்றானது அந்தப் பெரிய, பெரும் பிரதான கோயிலில் இருந்து வெளி வந்தது உங்களுக்கு தெரியும். அது எதிலும் நிற்கக் கூடாதபடி அது மிக பெலவீனமாக இருந்தது. அந்த காற்றானது ஏறக்குறைய அதன் மீது வீசி கீழே தள்ளியது. அங்கே வெளியில் நடந்து சென்று, சிறிய குளிர்காலம் முழுவதுமே உண்பதற்கு ஒன்றுமே இல்லாமல் இருந்தது. ஆகையால் அது களைகளை உண்டு, நிற்பதற்குப் போதுமான பெலனில்லாமல் இருந்தது. அவர்கள் தெய்வீக சுகத்தை விசுவாசிக்க முடியவில்லை என்பதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை, அதற்கு சில உயிர்ச்சத்துக்களே தேவையாயிருந்தது.

நல்லது, முதலாவது காரியத்தை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். அவைகள் மற்ற தானியக் களஞ்சியத்தில் இருந்த சிறிய கன்றையும் வெளியில் கொண்டு வந்தது. மேலும் சகோதரனே-! அது முழுவதுமாக கொழுத்ததாயிருந்தது. அதற்கு நல்ல ஆல்ஃபால்பாவும் நிறைய உயிர்ச் சத்துக்களும் இருந்தது, அது முழுவதுமாக கொழுத்ததாயிருந்தது. அந்த காற்றானது அதை தாக்க ஆரம்பித்த போது, நீங்கள் அறிவீர்கள், அந்த பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போன்றது கீழே வந்தது. என்னே-! அது சற்றே உதைத்துக் கொண்டு குதித்து, குதித்தெழுந்து அதனால் எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவாக பட்டியை சுற்றி ஓடியது.

மேலும், அந்த சிறிய, பரிதாபமான, மெலிந்த கன்று மகத்தான, பெரிய அருமையான தானியக் களஞ்சியத்திலிருந்து வெளி வந்து வேலியில் படாரெண்டு தன் தலையை இழுத்துக் கொண்டு "திஸ்க், திஸ்க், திஸ்க்" எப்படிப்பட்ட மத வைராக்கியம் என்று கூறியது" இவ்வாறாக...ஏன்-? போஷாக்கு குறைந்து போயிருந்தது.

28. இன்றைக்கு சபையும் போஷாக்கு குறைந்து போய் அப்படித் தான் இருக்கிறது. நீங்கள் விடுதலையடையும்படியாய் கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார். ஆம், ஐயா, நிச்சயமாக. முதலாவதாக சில உயர்ந்த உயிர்ச் சத்துக்களை தேவனுடைய வார்த்தையில் இருந்து பெறுவோம். எனக்கு தெரிந்து மிகச் சிறந்த உயிர்ச்சத்து தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது.

29. இப்பொழுது, மோசே அந்த ஆட்டுக் குட்டியைப் பார்த்து "நீங்கள் ஒவ்வொருவரும், வீட்டிற்கு ஒரு ஆட்டுக் குட்டியை எடுத்துக் கொண்டு, அது தலையீற்றாகவும் மற்றும் சோதிக்கப் பட்டதாகவும் இருக்க வேண்டும் என்று கூறினான்.

இப்பொழுது புதிதாக மனந்திரும்பியவர்கள் கவனியுங்கள். ஒவ்வொரு இரவுக்காகவும் அதிகமான நன்றிகளை தேவனுக்கு செலுத்துகிறோம். பாருங்கள், சோதனை கூட வருகின்ற முதல் காரியமாக இருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவினிடம் வந்த உடனேயே ஏதோ ஒன்று சம்பவிக்கப் போகின்றது. தேவனிடத்தில் வருகின்ற ஒவ்வொரு குமாரனும் சோதிக்கப்பட்டு, துன்பப்பட்டு ஒரு சிறிதாக சிட்சிக்கப்பட்டு, ஆனால் நீங்கள்...-? நீங்கள் உண்மையாகவே சோதிக்கப்படும்படியாக சம்பவங்கள் நடக்கும்.

பிள்ளை - பயிற்சியாக அது அப்படித் தான் இருக்கிறது. வேத வசனத்தின் படியான சோதனையில் - பிள்ளையாக பயிற்சியில் நீங்கள் விசுவாசமுடையவராக இருக்கிறீர்களா-? அவனை (பிள்ளையை) வளர்த்தெடுத்து, அவனை நேர்மையுள்ளவனாகக் கொண்டு வந்து, அவனுக்குச் சொந்தமானவைகளை அவனிடத்தில் கொடுக்கும் ஆசான்களுடனேயான பிள்ளைப் பயிற்சி இன்னும் மற்றவைகளைக் குறித்து வேதகாமமானது பேசுகிறதாக இருக்கிறது.

30. இன்றிரவு விஷயம் அப்படித் தான் இருக்கிறது. சபையானது எவ்விதத்திலாவது பெற்றுக் கொண்டிருக்க பிரசங்கிமார்கள் அனுமதிக்க வேண்டும். ஒரு சிறிய பிள்ளைப் பயிற்சியானது, அவர்களுக்கு தேவைப்படுகிறது. அது சரியே. இன்றைக்கு உலகத்தோடே விஷயமானது அப்படித் தான் இருக்கிறது. இயல்பாகவே மிக அதிகமானதை அவர்கள் பெற்றிருக்க காரணம், இளைஞர்களின் நெறி தவறுதலே; பிள்ளைப் - பயிற்சியானது நமக்கு தேவையானதாய் இருக்கிறது. அது அதிகமாக பெற்றோரின் நெறிதவறுதலே என்று நான் நினைக்கிறேன்.

என் தகப்பன், மெய்யாகவே அவர் அந்த பிள்ளைப் - பயிற்சியில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் கதவுக்கு மேல் மின்சாரத் தொடர்பை ஏற்படுத்தவோ அல்லது நிறுத்தவோ கூடிய ஒரு சாதனத்தை வைத்திருந்தார். ஒரு சவரகன் கத்தியை தீட்டும் தோல்வாரை - சுவற்றின் மீது தொங்க விட்டிருந்தார். அது எதனால் என்று நாம் அறிந்துள்ளோம். அதிலிருந்து நாம் எப்பொழுதும் தூரமாகவே இருப்பது அது மிகவும் மோசமாக இருக்கிறது, இல்லையா-? ஆம்.

பிள்ளைப் - பயிற்சி... நாம் மறுபடியும் பிறக்க வேண்டும் என்றும் தேவனுடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தத்தின் அடிப்படையில் நம்மைக் கொண்டு வந்து, நமக்காக தேவன் வைத்துள்ள சகல நன்மையான காரியங்களை அறிமுகப் படுத்தி, வார்த்தையைச் சொல்லி அதைப் பற்றி சத்தியத்தைப் பிரசங்கிக்கும் பிரசங்கிமார்கள் நமக்குத் தேவையாக இருக்கிறார்கள். அது ஒரு மேய்ப்பனாக இருக்கிறது. அங்கே தான் அது இருக்கிறது. அந்தவிதமாகத் தான் நீங்கள் அந்த உயிர்ச்சத்துக்களை அங்கிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு தானியக் களஞ்சியம் அல்லது ஒரு சபையாக இருக்கலாம், ஆனால் இப்படித் தான் நீங்கள்....

31. கவனியுங்கள், ஆனால் இப்பொழுது, முதலாவதாக அது சோதித்தறியப்பட்டு, பிறகு மாலையில் மூப்பர்கள் முன்னிலையில் கொல்லப்பட வேண்டும். நீங்கள் கவனியுங்கள், அங்கே வேதாகமம் பேசிக் கொண்டிருக்கும் கொல்லப்படும் மீட்பின் ஆட்டுக் குட்டியானது, ஒருமையில் இருக்கிறது என்றும் அது அதைப் பற்றிப் பேசுகிறது. ஆனால் மற்ற நிபந்தனைகளில், ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆட்டுக்குட்டியை கொல்ல வேண்டும். ஆனால் எல்லாமே ஒரே ஆட்டுக்குட்டியைத் தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அதின் ஆவிக்குரிய அர்த்தத்தில், அந்த ஒவ்வொரு குடும்பங்களிலும் அந்த தகப்பனானவன் சொந்த வீட்டின் ஆசாரியனாய் இருக்கிறான். ஒவ்வொரு வீட்டாரும் அதின் மாம்சத்தைப் புசிக்கத்தக்கதாக அந்த ஆட்டுக்குட்டி கொல்லப்பட்ட வேண்டும். ஆனால் அது அனைத்துமே ஒரு ஆட்டுக் குட்டியையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதன் பொருள் என்னவென்றால் அங்கே அநேக சபைகளும் அல்லது ஆலயங்களும் விசுவாசிகளாகிய சரீரங்களும் எல்லாமே மொத்தத்தில் ஒரே ஆட்டுக்குட்டியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நாம் அனைவருமே அந்த அதே ஆட்டுக் குட்டியிலிருந்தே போஷிக்கப்படுகிறோம். நான் எந்த அர்த்தத்தில் கூறுகிறேன் என்று பார்க்கிறீர்களா-?

32. இங்கே, ஒரு சபை இங்கே மேலே இருக்கிறது, மற்றொன்று அங்கே கீழே இருக்கிறது. ஒன்று ஆப்பிரிக்காவில் இருக்கிறது. ஒன்று ஆசியாவில் இருக்கிறது. ஆனால் அவைகள் அனைத்தும் ஒரே ஆட்டுக்குடியிலிருந்து வருகிறது. அதே ஆட்டுக்குட்டியிலிருந்து அந்த மீட்பு வருகிறது. நாம் வார்த்தையாய் இருக்கிற கர்த்தராகிய இயேசுவின் சரீரத்திலிருந்து போஷிக்கப்படுகிறோம். "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனோடு இருந்தது, அந்த வார்த்தை தேவனாக இருந்தது, அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்".

வார்த்தையின் வடிவில் நாம் அவரை ஏற்றுக்கொண்டோம். ஒரு சரியான மேய்ப்பவன் தனது சபையோருக்கு ஆட்டுக்குட்டியை, வார்த்தையையே போஷிப்பான். அதை எடுத்து தண்ணீரில்லாமல், கொதிக்க வைக்காமலும் அப்படியே பச்சையாய் அல்லாமல் கசப்பான கீரையோடும், சுடப்பட்டதாகவும், அதை புசிப்பாயாக. சில சமயங்களில் அது ஒருவித கடினமானதாகி இருக்கும், நீ

சிலவற்றை உடைக்க கூடும். ஆனால் கவலை கொள்ளாதே, அது எல்லாமே சரி தான். எவ்வாறாயினும் அதைப் புசி. யாத்திரைக்காக நீ ஆயத்தமாகிக் கொண்டு இருக்கிறாய், அதை நீ பார்த்தாயா-?

இப்பொழுது, பிறகு அந்த இரத்தமானது ஈசோப்புடன் வாசல் நிலைக்கால்களின் மீது பூசப்பட்டது. இப்பொழுது, அந்த இஸ்ரவேலர்கள் உள்ளே இருக்கின்றனர். இரத்தத்தின் கீழாக வருவதைத் தவிர அங்கே இன்னும் ஒரு காரியம் கூட அவர்கள் செய்யக் கூடாது. இரத்தத்தின் கீழாக, ஒரு விசை இரத்தத்தின் கீழாக, பாதுகாப்பு, அது தான், தேவனுடைய மீட்பின் திட்டமாய் இருந்தது.

33. ஓ, என்னே-! நான் இப்பொழுதே அதை சிந்தையில் பற்றிக் கொள்ளட்டுமா-? ஒரு விசை இரத்தத்தின் கீழாக, பாதுகாப்பு; எபிரேயர்.10:14 "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தி இருக்கிறார்". தேவன் அதைச் சொல்லி இருக்கிறார். அது அவருடைய வார்த்தையாயிருக்கிறது. அவருடைய இரத்தத்தைப் பலி செலுத்தியதின் மூலம், கழுவியிருக்கிறார்....

பழைய ஏற்பாட்டில் ஒரு மனிதன் அவன் ஏதோவொரு தவறைச் செய்யும் போது, அவன் அந்த ஆட்டுக்குட்டியைப் பிடித்து பலிபீடத்தின்மேல் வைத்து அதின் தலையின் மீது தன் கரங்களை வைத்து, தன் பாவங்களை அறிக்கை செய்து, குரல்வளையை வெட்டுவான். அந்த சிறிய ஆட்டுக்குட்டி மரிக்கையில் துடிதுடித்து இரத்தம் சிந்தி மரிக்கும், அது அவனாகத் தான் இருக்க வேண்டும் என்றும், தன்னுடைய இடத்தை அந்த ஆட்டுக்குட்டி எடுத்துக் கொண்டிருக்கிறது என்றும் அந்த பாவியானவன் உணருவான். ஆனால் அவன் அதே விருப்பத்துடனேயே திரும்பவும் வெளியே

செல்கிறான். அவன் விபச்சாரமோ, திருடியோ, பொய்யுரைத்தோ ஏதேனும் செய்து அவன் பிடிக்கப்படுவானேயானால், அவன் அதே விருப்பத்துடனேயே சென்றிருக்கிறான். காரணம் என்னவென்றால் அந்த இரத்தத்தின் உயிர் அணுவின் உட்புறத்தில் ஒரு மிருகத்தின் ஜீவனைத் தவிர வேறொன்றுமேயில்லை. அது இனச் சேர்க்கையினால் பிறந்திருந்தது, எடுத்துப்போடுவதற்கு பெலனற்றதாகவும் முற்றிலும் ஒரு நிழலாட்டமாகவும் மாத்திரமே இருந்தது.

விரும்பவில்லையா-? பிறகு அவன், "இப்பொழுது, அவள் விரும்புகிற எந்த இடத்திலும் அவள் பொறுக்கிக் கொள்ளட்டும் என்றும், ஒரு சிறிய கைப்பிடி அளவை உள்ளான எண்ணத்தோடு எப்போதும் சிந்த விடுங்கள், அரிவாள்களுடன் சென்ற வாலிபர்களிடத்திலும் கூறி கட்டளை இட்டிருந்தான்" நான் அதை விரும்புகிறேன். "அப்படியே ஒரு சிறிய கைப்பிடி அளவை..." தண்ணீரை கொஞ்சம் சிறிதாக கலக்குகிற ஒரு சிறிய பழமை நாகரீகமான எழுப்புதல். "உள் எண்ணத்தோடு ஒரு சிறியதை சிந்தவிடுவது". அந்த சிறிய கைப்படி அளவை வழியோரமாக கண்டுபிடிக்க நீங்கள் விரும்புகிறதில்லையா-? என்னே-! அந்த தேவனுடைய வாக்குத்தத்தமானது, அப்படியே கொஞ்சமாக ஒரு சிறியதாக, ஒருவிதமாக உங்களை திடீரென நிறுத்தி தூக்கிப் போடுகிற தேவனுடைய வயலில் இருந்து வருகின்ற ஜீவனை, ஒரு சிறிய அளவில் உங்களுக்கு கொடுக்கின்றதாய் இருக்கிறது. அந்த அறுப்பின் கர்த்தர் அதை கட்டளை இட்டிருக்கிறார்.

57. கவனியுங்கள். அங்கே அந்த பருவத்தின் முடிவில், பருவத்தின் முடிவில், அவள் தன்னுடைய கோதுமை இன்னும் மற்றவைகளை எடுத்துக் கொண்டு, அவள் திரும்ப வெளியில் சென்றாள், பிறகு அந்த இராத்திரியில், இங்கே தான் புறஜாதி சபை வருகின்ற, நான் நினைக்கின்ற உண்மையான புறஜாதி சபையின், ஒரு அருமையான மாதிரி இருக்கின்றது. அந்த இராத்திரியில் அவள் அங்கே வெளியில் சென்ற பொழுது போவாஸ் கோதுமை குவியலின் மேல் படுத்திருந்ததைக் கண்டாள்... அது என்னவாக இருக்கிறது-? அவருக்குள் எல்லா தேவனுடைய நிறைவும், தேவனுடைய வல்லமைகளும் வாசமாயிருந்தது. முழு அறுவடையின் குவியலின் மேல் படுத்துக் கொள்ளுதல். அவள் நகர்ந்து,

அவனுடைய பாதத்தில் படுத்துக் கொண்டதன் மூலம் முழுவதுமாக தன்னை வெளிக்கட்டினாள்.

“நான் தெய்வீக சுகமாக்குதலையும், உயிர்த்தெழுதலின் வல்லமையையும் விசுவாசிக்கிறேன். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார் என்றும் நான் விசுவாசிக்கிறேன்" என்று கூறும். தேவனை அவருடைய வார்த்தையில் பேசும் அந்த புறஜாதி சபை, அந்த உண்மையான, நிஜமான தேவனுடைய சபை வெளிப்படையான துன்புறுத்து தலுக்கு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். "அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன” என்று கூறும் இந்த எல்லாப் பழமையான, குளிர்ந்து போன, சம்பிரதாயமான ஜீவனற்றவைகளைக் கூறுகிற போது, நாங்கள் எங்களை வெளிப்படுத்தி அவருடைய பாதங்களில் அமர்வோம்” அல்லேலூயா-!

58. சரியாக இருண்ட வேளையில் நள்ளிரவின் நேரத்தின் போது, அவன் எழுந்து சுற்றிலும் பார்த்தான். ஒரு கற்புள்ள ஸ்திரீயை, சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படாத, தன்னுடைய பாதங்களில் படுத்துக் கொண்டுள்ள ரூத்தை அவன் பார்த்தான். அவன் தன்னுடைய வஸ்திரத்தை எட்டி எடுத்து அதை அவள் மீது விரித்தான். நான் என்ன கூறுகிறேன் என்று புரிகின்றதா-? உங்களுக்குப் புரியவில்லையா-? கிறிஸ்துவுக்கு அது ஒரு மாதிரியாய் இருக்கிறது போல, அந்த பரிசுத்தாவியானவர் பரிசுத்தாவியை விரித்தார். “இப்பொழுது ஒரு நிமிடம் பொறு, நான் குறிப்பிட்ட ஒரு பிரமாணத்தைச் செய்ய வேண்டும். நான் உன்னுடைய நெருங்கின உறவின் முறையானாக இருக்கிறேன். மேலும் தேசத்தில், அங்கே ஒரு மீட்பின் பிரமாணம் ஒன்று இருக்கிறது. மேலும் நீ ஒரு கற்புள்ள அல்லது குணசாலியான பெண் என்பதை நான் அறிவேன்

என்று கூறி அவளை ஒரு இடத்துக்குள்ளாக அனுப்பினான். தேவன் உங்கள் இருதயத்தை அறிவார். அவர் அறியமாட்டாரா-? "இப்பொழுது, இந்தக் காலையில், நான் கீழே சென்று இனத்தானின் ஒழுங்கில் என்னால் செய்யமுடியுமா என்று பார்க்கிறேன்" என்று அவர் கூறினார்.

59. இப்பொழுது, ஒரு பெரும் காட்சி இங்கிருக்கிறது. முதலாவதாக, இஸ்ரவேலில் ஆஸ்தியை இழந்து போன ஒருவனை மீட்கக்கூடிய ஒருவனே ஒரு மீட்பனாக இருக்கிறான் (பிரசங்கிமார் களாகிய நீங்கள் அறிவீர்கள்), அம்மனிதன் ஒரு இனத்தானானாக இருக்க வேண்டும். அவன் நெருங்கின இனத்தனனாகவும், ஒரு தூரத்து இனத்தனானாக இல்லாமல், ஒரு நெருங்கின இனத்தனானாக இருக்க வேண்டும். எப்படி தேவன் ஒரு நெருங்கின இனத்தனானாக வரமுடியும்-? தேவன் தாமே மாம்சமாகி நமக்குள்ளே வாசம் செய்து, மனித இனத்திற்கு அவர் உறவினறாக வரவேண்டும். அது சரியாய் இருக்கிறது. அது அந்த ஒரு வழியில் மாத்திரமே இருக்க முடியும். தேவன் இங்கே நமக்குள்ளே மாம்சமாகியபோது, அவர் தூதர்களுக்கல்ல மானிடர்களுக்கே உறவினரானார். அவர் ஒருபோதும் தூதனுடைய ரூபத்தில் வராமல், அவர் தம்மைத் தாமே தாழ்த்தி பரலோகத்தின் எல்லா மகிமையில் இருந்தும் தம்மை உரிந்து கொண்டு கீழே வந்து, மீட்பின் இனத்தானின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்காக மனிதனுடன் உறவினராக்கிக் கொண்டார். ஓ, ஆதாமுடைய வீழ்ந்து போன இனத்திற்காக என்னே விலைமதிக்க முடியாத அன்பை பிதாவானவர் வைத்திருக்கிறார். தம்முடைய ஒரே குமாரனை பாடுபடுவதற்கும், அவருடைய கிருபையினால் நாம் மீட்கப்படவுமே கொடுத்தார். அங்கே தான் தேவன் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் செய்து மானிடவர்க்கத்திற்கு

உறவினராகி ஒரு இனத்தானாகி, அவர் ஒரு நெருங்கின இனத்தான் ஆனார்.

௬0. அடுத்தது, அவன் பண அடிப்படையில் அதைச் செய்ய தகுதியுள்ளவனாக அவன் இருக்க வேண்டும். யார் அதிகமான பணத்தை உடையவனாக இருப்பான்-? என்னவிதமான கடன் அடைக்கப்பட வேண்டும்-? அங்கே இருக்கின்ற எல்லா உலகமும், எல்லா விண்வெளிகளும், எல்லாக் காலங்களும் மற்றும் அனைத்துமே தேவனுக்கு சொந்தமானதாக இருக்கும் போது அவர் பண அடிப்படையில் அவர் தகுதியானவர். அல்லேலூயா-! ஆனால், அவர் ஆவியின் ரூபத்தில் இருக்கும் போது, அவர் அதைச் செய்ய முடியாது. ஏனென்றால், அவர் ஆவியாய் இருக்கிறார், மனிதன் மாம்சமாக இருக்கிறான். ஆவி, மாம்சமாகி நமக்குள்ளே வாசம் செய்து நமக்கு உறவினரானார். நீங்கள் அதைப் பார்க்கின்றீர்களா-? கவனியுங்கள்....

அங்கே உங்களுக்கு இன்றிரவு திறந்த வரவேற்பானது இருக்கிறது. தேவன் தம்மை யானை தந்த அரண்மனையிலிருந்து உரிந்து கொண்டு வெளிவந்த போது, தம்மைத் தாமே பாவம் நிறைந்த மாம்ச ரூபமாக்கிக் கொண்டு தம்மைத்தாமே தாழ்த்திக் கொண்டு இறங்கி வந்து, இன்றிரவில் இந்த உலகத்தில் இருக்கும் மிகவும் ஏழையான ஒரு பிச்சைக்காரனுக்கு உறவின் முறையனானாக இருப்பதற்காக, அவனுக்கு ஒரு உறவின் முறையான் ஆவதற்கு, யேகோவா தாமே பிச்சைக்காரனுக்கு உறவின் முறையான் ஆனார். "நரிகளுக்குக் குழிகளும் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு, ஆனால் மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை". அந்த, அதே மகிமையின் ராஜா உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம், துணியினால்

சுற்றப்பட்டு ஒரு தொழுவத்தில் பிறந்தார். ஒரு பாவியுடன் உறவின் முறையானாக்கிக் கொள்வதற்காக, தாழ்த்திக் கொண்டும், இரக்கமனதுடனே இறங்கி வந்து, தம்மைத்தாமே கீழே கொண்டு வந்தார். ஜனங்கள் இதைச் சிந்திக்கட்டும். இந்த ஈடு இணையற்ற அன்பை நீங்கள் எப்படி புறக்கணிக்க முடியும்-?

61. அது என்னவாக இருந்தது. நம்முடைய பாவத்தை எடுத்துக் கொண்ட போது தேவன் ஒரு பாவியானார். நான் அவரைப் போல ஆவதற்காக இயேசு என்னைப் போலானார். நான் சுவீகார புத்திரனாக ஆகுவதற்காக பாவமே அறியாத தேவனுடைய ஒரு குற்றமற்ற ஆட்டுக்குட்டி பாவமாயிற்று. ஆமென். அது தான் மீட்பின் காட்சியாய் இருக்கிறது. அவர் எவ்விதமாக இறங்கி வந்தார். பாத்திரவான் என்னப்பட்டவர், தம்மையே கொள்ளையாடி, வீடு இல்லாமல், போவதற்கு இடம் இல்லாமலும், தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டு, பாவம் நிறைந்த மாம்சத்தில் தம்மைத் தாமே கீழே கொண்டு வந்தும் தன்மீது ஏற்றுக்கொண்டும், தூதர்களின் சுபாவத்தின்படி அல்லாமலும் தேவனுடைய சுபாவத்தின்படி அல்லாமலும், மனிதனோடு நடக்கவும் மனிதனோடு புசிக்கவும் மனிதனோடு உறங்கவும் மனிதனோடு மரிக்கவும், மனித சுபாவத்தைத் தன் மீதே எடுத்துக் கொண்டார். அங்கே தான் நீங்கள் இருக்கின்றீர்கள். ஆதியில் இருந்து அந்த முழு திட்டத்தின் கறையற்ற தேவ ஆட்டுக்குட்டியாக அங்கே இருக்கும் அவர், இங்கே இப்பூமியின் மீது ஜீவ அப்பமாக இருக்கிறார்.

இப்பொழுது, அந்த அடுத்த காரியமானது செய்யப்பட வேண்டும். ஒரு மீட்பின் இனத்தான் அதை மீட்டுக் கொள்வதற்கு அந்த நபருக்கு, நெருங்கின உறவின் முறையானவனாக இருக்க வேண்டும். அடுத்த காரியமாக

அதை மீட்டுக் கொள்வதற்கு அவன் பாத்திரவானாகவும், நீதிமானாகவும் ஒரு நல்ல நபராகவும் இருக்க வேண்டியதுதான், இவ்வாறு ஒரு சட்டத்திற்கு உட்படாதவன் அதைச் செய்ய இயலாது. மேலும் இனி மேலும் யார் பாத்திரவனாக இருக்கப் போகிறார்–? அந்த மாம்சமான யேகோவா தானே.

62. அவன் செய்ய வேண்டிய அடுத்த காரியமானது பகிரங்கமாக சாட்சி ஒன்றைக் கொடுக்க வேண்டும். அதாவது அவன் அதைச் செய்து விட்டான். எனவே போவாஸ் அடுத்த காலையில், வாசல்களுக்கு ஓடி காத்துக் கொண்டிருந்தான். அந்த மூப்பர்கள் ஒன்று கூட ஆரம்பித்த போது, "ஒரு நிமிடம் பொறுங்கள், ஒரு நிமிடம் பொறுங்கள்" என்று அவன் கூறினான். அவர்கள், பட்டிணத்தின் எல்லா மூப்பர்களும் வாசலுக்கு வெளியில் கூடினார்கள். ஓ, தேவனே இரக்கமாயிரும். கவனியுங்கள். பகிரங்க சாட்சியானது பட்டணத்திற்குள் செய்ய முடியாது. அது வாசலுக்கு வெளியில் தான் செய்யமுடியும், மூப்பர்களுக்கு முன்பாக சாட்சி அளிக்க வேண்டும்.

அவன், அந்த மூப்பர்களை வெளியில் அழைத்து "இந்த நாளில் நான், நகோமியை மீட்டுக் கொண்டேன் அங்கே யாராவது இருப்பார்களானால் அப்படியே..." என்று கூறினான். ஒரு நபர் அங்கே இருந்தார். ஒரு இனத்தானும்கூட, ஆனால், அவர் அதை மீட்க முடியாது. ஆனால், அவரால் அதை மீட்க முடியாது. எனவே எல்லாமே போவாஸ் மேல் விழுந்தது.

"நான், நகோமியை மீட்கவேண்டும், நான் - நமது சகோதரனுடைய ஆஸ்தியை, அது எல்லாவற்றையும் நான் திரும்ப எடுத்துக் கொள்வேன் என்று அவன் கூறினான்.

ஒருவருமே இல்லை ... நல்லது “நீர் அதை மீட்டுக் கொண்டதற்கு,” அதற்கு “இந்த நாளில் நான் ஒரு சாட்சியாய் இருக்கிறேன்” என்று அவர்கள் (ஒவ்வொருவரும்), கூறினார்கள். அவன் சகலத்தையும் மீட்டு விட்டான் என்பதற்கு ஒரு அடையாளமாக அவன் தன் பாதரட்சையைக் கழற்றி தன் அயலாகத்தானிடம் ஒரு அடையாளமாக - ஒரு அடையாளமாக கொடுத்தான். அவள் இழந்த சகலத்தையும் அவன் மீட்டுக் கொண்டான். அவ்வாறு செய்வதன் மூலம் அவன் ரூத்தையும் கூட தனக்கு மணவாட்டியாகப் பெற்றுக் கொண்டான்.

63. இஸ்ரவேல் பாவம் செய்த போது... மனிதன் பாவம் செய்து தேவனை விட்டு தூரமான போது ஒரு இரத்தம் வடிந்து கொண்டிருக்கும் பலியாக கிறிஸ்து சென்றார் - வந்தார். உலகத்தோற்ற முதற்கொண்டு, ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுமே அதை நிழலாட்டமாக பிரதிநிதித்துவப் படுத்தியது. உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் (லூக்கா1:78) ஜீவனாக வந்தபோது அந்த மகத்தான யேகோவா மாம்சத்தில் அங்கே வெளியே, வாசல்களுக்குப் புறம்பே, வானத்திற்கும் பூமிக்கும் நடுவில் உயர்த்தப்பட்டு இரத்தம் வடியும் அவருடைய அந்த சரீரமானது "நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்” என்பதை அங்கே காண்பித்தது.

ஆதாமுடைய வீழ்ந்து போன மானிடவர்கத்தை, அவர் மீட்டு விட்டதை, தேவன் காண்பித்தார். அங்கே தான் இருக்கிறது. அவரைத் தான் வழியிலே முன்பாக, தூரத்தில் யோபு கண்டான். “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்பதை

நான் அறிந்திருக்கிறேன்” கடைசி நாட்களில் அவர் இங்கு வந்து இரத்தம் சிந்தி என்னுடைய ஸ்தானத்தில் மரிப்பார்.” இந்த தோல் புழுக்கள் என்னுடைய சரீரத்தை அழித்தாலும், என்னுடைய மாம்சத்திலிருந்து நான் தேவனைப் பார்ப்பேன். அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே, நானே அவரைப்பார்ப்பேன்”.

64. அது அதிசயமாயிருக்கிறது. அது இருக்கவில்லையா-? ஓ, அந்த பறக்கின்ற கொடி, அவருடைய பிரசன்னமானது இங்கே இருக்கின்றது. சற்று முன்பாக தன்னுடைய மூக்கில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளப்பட்ட அந்த மனிதன் சுகமடையும்படி அவனை அங்கே பின்பாக நிற்கச் செய்வதற்காகத்தான் அவர் மரித்தார். சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அதை அவர் செய்தார் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா-? நிச்சயமாக. அவர் செய்தார்.

அங்கே சுகம் அடையும்படியாக மூட்டுவலியுடன் உங்களுக்கு அருகில் அமர்ந்திருக்கும் அந்த மனிதனுக்கும் அதே காரியத்தை அவர் செய்திருக்கிறார். ஆமென்.

சுகமடையும்படியாக வயிற்றுத் தொல்லையுடன் அங்கே அவருக்கு அருகில், அவளுக்கு அருகில் அமர்ந்திருக்கும் பெண்ணிற்கு அதே காரியத்தை செய்திருக்கிறார். அது சரியாய் இருக்கிறது. அவர் அதைச் செய்திருக்கிறார். எல்லாம் சரி.

அவர் கொடுப்பதற்காக மரித்து, அவர் செய்தார்... இப்பொழுது நான் பேசுவதைக் கேட்க முடிகிற ஒரு காதுகேளாத பெண் உனக்கு இங்கு இருக்கிறாள் சரி. தானே, அவர் செய்தார்... இப்பொழுது, நான் பேசுவதை நீ கேட்கிறாயா-? உன்னால் முடியவில்லையா-? நிச்சயமாக அந்த நோக்கதிற்காக அவர் மரித்தார்.

அங்கே முன்பாக... கொடுப்பதற்காக அவர்-? ஐயா, நீங்கள் அதை விசுவாசிக்கின்றீர்களா-? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அங்கே பின்பாக அமர்ந்து கொண்டிருக்கும் அந்த ஸ்திரீயானவள் மேடிசன் இந்தியாவிலுள்ள மனநல மருத்துவ மனையில் இருக்கும் அவளுடைய சிநேகிதரை குறித்து நினைத்துக் கொண்டு இருக்கிறாள். அவர் விடுதலை கொடுத்தார். சரியான நிலைமைக்கு அவளைத் திரும்பவுமாக மீட்டுக் கொள்வதற்காக அவர் மரித்தார்.

65. அவர் என்னவாக இருக்கிறார், யேகோவா தேவன் அவர் ஒரு மீட்பராக இருக்கிறார். அல்லேலூயா-! இப்பொழுது, இங்கே இந்த கட்டிடத்திற்குள் அவருடைய வார்த்தையை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் உயிரோடிருந்து ஆளுகை செய்கிறார். அவர் தேவனுடைய மீட்பராக இருக்கிறார், அவர் என்னுடைய இனத்தானாக இருக்கிறார். அவர் எனக்கு சகோதரனானார், அவர் என்னுடைய தேவனாக இருக்கிறார், அவர் என்னுடைய இரட்சகராக இருக்கிறார், அவர் என்னுடைய வருகின்ற ராஜாவாக இருக்கின்றார். அவர் என்னை சுகமாக்குபவராக இருக்கிறார். அவர் என்னுடைய தகப்பனாய் இருக்கிறார். அவர் என்னுடைய தாயாக இருக்கிறார். வரப்போகிற உலகத்திலும், இந்த உலகத்தில் இருப்பவைகளில் அவர் எனக்கு எல்லாமாக இருக்கிறார்.

இச்சங்கத்தின் பிரதிநிதிகள், மீட்கப்படுதலை, எப்போதாவது நினைத்து, அதை ஆதிமுதற் கொண்டு இந்தக் காலங்கள் வரையிலும் கூட அவர்கள் சிந்தித்து அடையாளம் கண்டு கொள்ளும் போது அவர்கள் எவ்வளவு சிறியவர்களாக இருப்பார்கள். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் கழுவப்பட்டு வெண் வஸ்திரங்கள்

தரித்துக்கொண்டு தங்கள் கரங்களில் குருத்தோலைகளுடனும், குருத்தோலைகளை ஏந்திக் கொண்டுள்ள குழுவினராகிய நாம் அனைவரும் வந்து, தாவீதின் குமாரனுடைய சிங்காசனத்தின் இருக்கையில் நாம் நம்முடைய இடத்தை எடுத்துக் கொள்ளும்போது (அல்லேலூயா-!) இன்னும் அவருக்கு மீட்பின் கீதங்களை நாம் அனைவருமே பாடுவோம் -..-? அல்லேலூயா-! ஓ, நிச்சயமாகவே நாம் செய்வோம்.

66. ஏதேன் தோட்டத்தில் அங்கே ஆதாமையும் ஏவாளையும் அந்த முதலாவது, சிறிய இனிய இருதயங்களை தூரத்தில் நான் காண்கிறேன். தேவன் அவர்களை தண்டித்தபடியால் அங்கே பின்பாக ஆதாம் தன்னுடைய கரத்தை தனது சிறிய இனிய இதயத்தின் மீது போட்டுக் கொண்டு அவளுடன் செல்வதை நான் காண்கிறேன். தன்னுடைய அன்பானவள் மீது தன்னுடைய கரத்தைப் போட்டுக் கொண்டு அவன் வெளியே புறப்பட்டான். ஆதாம் வஞ்சிக்கப் படவில்லை: அவன் வெளியேற வேண்டியதில்லை. ஆனால் அவன் தன் மனைவியை நேசித்த காரணத்தினால் வெளியேறினான். இரண்டு கண்களும் விரிவாக திறக்கப்பட்டே வெளியேறினான். அவள் வாதிக்கப்படபோவாளேயானால், அவனும் அவளுடனே போக வேண்டும் என்பதில் பிரச்சனை ஒன்றும் இல்லை.

தேவன் கீழே பார்த்த போது அந்த மானிடவர்கத்தின் ஒரு அன்பைப் பார்த்தார். தம்மாலேயே தாங்கிக் கொள்ள முடியாததாய் அவருக்கு அது மிகவும் மகத்தானதாய் இருந்தது. அது சரியாய் இருக்கிறது. "நானும் கூட வந்து போவேன்" என்று அவர் கூறினார். "அவள் வித்துக்கும் சர்ப்பத்தின் வித்துக்கும் நான் பகை உண்டாக்குவேன்" என்றார்.

கூர்ந்து கவனியுங்கள். 4000 வருடம் கழித்து தூரத்தில் எருசலேம் நகரத்தில் (நாம் நமது காட்சிகளை மாற்றிப் பார்ப்போமாக), எருசலேமின் தெருக்களில், பம்பிட்டி, பம்பிட்டி, பம்ப் என்று அங்கே கீழே வாசல்களுக்கு புறம்பே கொல்கொதாவை நோக்கி ஒரு சிறிய நபர் தன்னுடைய தலையில் சிறிய முள்முடியுடனும் தன்னுடைய தோள்களின்மீது சிலுவையுடனும் அவருடைய முதுகு முழுவதுமாக பார்த்தால் அங்கே சிறிய சிவப்புக் கறைகள் இருந்தன. அவைகள் என்னவாய் இருந்தன-?

67. ஆக்கினையின் கீழாக வெளியில் சென்றுகொண்டு வெளியேறிக்கொண்டு இருந்தபோது தூரத்தில் பின்பாகப் பார்த்தால் ஒரு நிழலாட்டத்தோடு - எங்கேயோ ஒரு மீட்பின் நிழலானது இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் மீது இரத்தமானது வடிந்து கொண்டிருந்தது. அங்கே எங்கேயோ ஒரு நிழல், அது அவர் அறிந்து, ஏதோவொன்று சென்று கொண்டிருப்பதை நான் கேட்கிறேன். (சகோதரன்.பிரன்ஹாம் கைத்தட்டுகிறார் - ஆசி) அது என்னவாக இருக்கிறது-? சில நேரங்களில் பேசிக் கொண்டிருந்த, முதிர்ந்த இரத்தம் தோய்ந்த ஆட்டுத் தோலானது அவனுடைய கால்களில் மேலும் கீழுமாக அடித்துக் கொண்டு இருந்தது தான் அது. "ஆற்றுக்கு அப்பால் ஒரு நிலம் அங்கே இருந்தது. அதை அவர்கள் என்றென்றும் இனிமை என்று அழைத்தார்கள். விசுவாச தீர்மானத்தின்படியே நாம் அந்த கரையை அடையாளம்...'". ஒரு நாளில் அதை அறிந்து, அவர்களும் ஏதேனுக்குள் திரும்பவும் வருவார்கள்.

இப்பொழுது, இப்பொழுது தூரத்தில் அவர் போய்க்கொண்டிருப்பதை நான் பார்க்கிறபடியே அந்த இரண்டாம் ஆதாம் தனது முதுகில் சிறிய கறைகளுடன் மலைக்கு மேலே சென்று கொண்டு இருக்கிறார். அவர்

அவ்விதமாக நடந்து செல்கிற போது, பெரிதானவைகளை, பெரிதானவைகளை, பெரிதானவைகளை அவர்கள் அடைகின்றனர். அது என்னவாக இருக்கிறது-? சிறிது நேரம் சென்று அவர்கள் அனைவருமே ஒரு இடத்திற்குப் போகின்றனர். ஏதோ ஒன்று திரும்பவுமாக அடிக்கப்படுக் கொண்டிருப்பதை நான் கேட்கிறேன். (சகோதரன். பிரன்ஹாம் கை தட்டுகிறார் - ஆசி) அது என்னவாக இருக்கிறது-? இனி அவர் தாமே யேகோவாக இல்லாமல், அவர் இறங்கி வந்து மாம்சமான, இரண்டாம் ஆதாமாக அங்கே சென்று கொண்டு இருக்கிறார். (எதற்காக-?), தம்முடைய இனிய இதயத்துடன் பாதாளத்துக்கும் கூட செல்லவும், அவனை திரும்ப மீட்கக்கூடிய ஒருவராக-?.. தம்முடைய மணவாட்டியை மீட்கிற கிறிஸ்து. அல்லேலூயா-! அவர் அதைத் தொலைவில் ஆதாமுக்குள் கொண்டார். அவர் மனுகுலத்தை தம்முடன் திருமணம் புரிந்து கொள்ள நம்மோடு இனத்தானாக இறங்கி வந்து மாம்சமானார். அங்கே தான் அவர் தூரத்தில் கல்வாரிக்குப் போகின்றார்.

68. அவ்வாறு அவர் மலையின் மேலே போகிறபோது, அவருடைய சிறிய தோள் உராய்ந்து பலவீனமாது. "நான் அவரை அடையும் வரைக்கும், அதிக நேரமாகப் போவதில்லை" என்று அந்த பழைய மரணத்தேனீ அவரைச் சுற்றி ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

முற்றிலுமாக வட்டமிட்டு, வட்டமிட்டு ரீங்காரம் செய்து சிறிது நேரம் சென்று, அது அவரைக் கொட்ட வேண்டும். ஆனால், நண்பர்களே, ஒரு தேனீயானது யாரையாகிலும் ஆழமாக எப்போதாவது கொட்டுமானால், அது இனி யாரையும் கொட்டாது. அது தன்னுடைய கொடுக்கை வெளியே இழுத்து விடும். எனவே அதற்கு இனிமேல் கொடுக்கு கிடைப்பதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மரணத்தின் கூரை பிடித்துக் கொள்வதற்காக, அதன் காரணமாகத் தான் தேவன் இந்த பூமியின் மேல் மாம்சமானார் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுது, மரணத்தின் கூர் இனி இல்லை. அந்த தேனீ பெரிய அளவில் நகர்ந்து ரீங்காரமிடலாம், ஆனால் அது கொட்ட முடியாது. “மரணமே உன் கூர் எங்கே-?பாதாளமே உன் ஜெயம் எங்கே -?"

ஆனால் இன்றைக்கு இந்த பூமியின் மேல் ஒவ்வொரு விசுவாசிக்கும் தப்பித்துக் கொள்ளும் ஒரு வழியை கிறிஸ்துவானவர், அந்த இனத்தானாகிய மீட்பர் உண்டாக்கி இருக்கிறார். அந்தத் தேனீ உங்களை பயமுறுத்த முயற்சி செய்யலாம். ஆனால், தேவன் தாமே மாம்சமாகி மரணத்தின் கூரை அவர் பிடித்துக் கொண்ட போது, ஒரு பாவியாக இருக்கும் என் ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு கிரயத்தை செலுத்தினார் என்று அங்கே தூரத்தில் கல்வாரியை நான் சுட்டிக்காட்ட முடியும். நான் வீட்டிற்கு வருவதற்கு, வரவேற்பு தரைவிரிப்பை அவர் விரித்து இருக்கிறார், "விருப்பமுள்ளவன் வந்து ஜீவத்தண்ணீருற்றிலிருந்து இலவசமாக பானம் பண்ணக்கடவன், என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை”.

69. ஓ, என்னே-! அங்கே வெளியில் கோடாரிகள் தீட்டப்படுவதை அவன் கேட்ட பொழுது, பவுல் கூறியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவனுடைய சிறைச்சாலை அறையில் சில நாட்களுக்கு முன்பு நான் நின்று கொண்டிருந்தேன். அங்கே அந்த பழைய தேனீ அவனைச் சுற்றி ரிங்காரம் இட்டுக்கொண்டிருந்தது. அங்கே அவனுடைய தலையை அவர்கள் வெட்டி எறியும்படி அவர்கள் கோடாரியை உள்ளே கொண்டு வந்தனர்,

"இப்பொழுது, நான் உன்னை பிடித்து விட்டேன்" என்று அது கூறியது.

"மரணமே உன் கூர் எங்கே-? " கல்வாரியில், தூரத்தில் அது விட்டுவிடப்பட்டது. "பாதாளமே, உன் ஜெயம் எங்கே-? ஆனால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக".

"தேவன், அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்", இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்... ஆதாம், ஏவாளுடன் வெளியே சென்று அவளை இவ்வளவாய் அன்பு கூர்ந்தான்.கிறிஸ்துவும், சபையுடன் சென்று அவளை இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். தேவன் உலகத்தில் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்..." ஆதாம் ஏவாளுடன் சென்றான், அவளுடைய தவறு, அவள் தவறாய் இருந்தாள். அந்தத் தவறை அவன் அறிந்திருந்தான், அவன் குற்றமற்றவனாக இருந்தான், ஆனால் அவளோ குற்றவாளியாய் இருந்தாள்.

ஆனால், "நான் அவளோடு போவேன்" என்று ஆதாம் கூறினான்.

கிறிஸ்து சபையைப் பார்த்து அது தவறாய் இருக்கிறது என்று அறிந்தார். இருந்தும் ஒரு பாவியாக தொலைவில் நமது ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு, நமக்காக மரிக்கவும், நமக்காக மரணத்திலிருந்து அந்தக் கூரை எடுக்கவும், கிறிஸ்து நம்முடன் சென்றார். பாவியே, அப்படிப்பட்ட ஈடுஇணையற்ற அன்பை எப்படி நீ புறக்கணிக்க முடியும்-?

70. "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்கப் போகிறார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்தத் தோல் புழுக்கள் இந்த

சரீரத்தை அழித்தாலும், இன்னும் நான், என் மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பேன், அவரை நானே பார்ப்பேன், அந்நிய கண்கள் அல்ல" என்று யோபு கூறியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை .

இன்றிரவு நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா-? நம்முடைய நேரமானது நம்மிடமிருந்து வீழ்ச்சி அடைந்து கொண்டு உள்ளது. ஓ எவ்வளவாக பரிசுத்தாவியானவர் என் இருதயத்தில் அசைவாடுவதாகத் தோன்றுகிறது. நான் எதையும் சிந்திக்க முடியவில்லை. நண்பர்களே, எவ்வாறாக இயேசு இங்கே இப்பூமியில் இறங்கி வந்து மீட்பின் வழியை உருவாக்கி ஏதேன் தோட்டத்திலிருந்தும், அதற்கு முன்பே வழியையும் ஒவ்வொரு திட்டத்தையும் மிகச்சரியாகவும் ஜாக்கிரதையாகவும் ஆராய்ந்து நிறைவேற்றியதை விடவும் பெரிதானது எதுவுமில்லை. உலகத் தோற்றத்துக்கு முன்பே யேகோவா பேசினார், இங்கே வெளியில் சென்று, மேலும் வந்து, பாவம் செய்த நீ இரட்சிக்கப்படும்படி மரித்தார். அவருடைய முகத்தில் பெரியதாகத் துப்பியும், பரியாசம் பண்ணப்பட்டும், அவதூறு பண்ணப்பட்டும், அவருடைய தலையில் ஒரு முட்கிரீடமும் வைக்கப்பட்டு, ஒரு குற்றமற்ற மனிதனாகவும், பாவிகள் தங்கள் சகல குற்றக் கறைகளையும், இம்மானுவேலரின் இரத்தக் குழாயிலிருந்து வடிந்து கொண்டிருக்கும் இரத்த வெள்ளத்தின் கீழ் மூழ்கி போக்கிக் கொள்ளும். ஸ்தோத்தரிக்கப்பட்ட அந்த மீட்பராக தொலைவில் தொங்கிக் கொண்டு இருக்கிற அப்படிப்பட்ட ஈடு இணையற்ற அன்பை நீ எப்படிப் புறக்கணிக்க முடியும்.

71. நாம் நமது தலைகளை தாழ்த்துவோமாக. பரம்பிதாவே, ஓ தேவனே-! நீர் இங்கு இருக்கிறீர் என்பதை அறிந்து என் இருதயம் திரும்பி சுழன்று கொண்டும், சுழன்று கொண்டும் இருப்பதாக அது தோன்றுகின்றது. நீர் இந்தப்

பார்வையாளர்கள் மீது ஒரு பெரிய பிரகாசமான ஒளியின் உருவத்தில் அசைவாடி பேசி தரிசனங்கள் வெளித் தோன்றுவதை பார்த்து, காலமானது இப்பொழுதே சமீபமாக இருக்கிறது என்று அறிகின்றோம். நீர் இயேசுவை திரும்பவும் சீக்கிரமாக அனுப்பும். அவர் இந்த பூமிக்கு வருவார். "அந்த நாளையும், நாழிகையையும் பிதா ஒருவர் தவிர தூதர்களும் அறியார்கள்". மேலும் இங்கே இந்த பூமிக்கு அவர் வருவது, அந்தப் பேழையானது ஆயத்தம் செய்யப்பட்டு அதற்குள்ளாக ஏழு அல்லது எட்டு ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்ட, நீடிய பொறுமையாய் இருந்த நோவாவின் நாட்களை போலவே கால வழியானது கடந்து போனதாய் இருக்கிறது.

இப்பொழுது ஒரு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே இங்கே இருக்க வேண்டியது, இன்று அவருடைய வருகையின் வழியானது காலம் கடந்து போனதாகவும் குறித்துக் காலத்தை கடந்ததாகவும் இருக்கிறது. ஆனால், தேவனோ ஒருவரும் கெட்டுப் போவதை விரும்பாமல், எல்லாரும் மனந்திரும்புதலுக்கு வர வேண்டும் என்கிறார்.

72. இன்றிரவு அந்த கால் மிதியானது அந்த வரவேற்பு கம்பளமானது விரிக்கப்பட்டு, குற்றமானது சுத்திகரிக்கப்பட்டு, தகுதியற்ற பாவியை தேவனுடன் ஒப்புரவாகும்படி கொண்டு வந்து, அவனை அவனுடைய மனைவி மற்றும் அவனுக்கு அன்பானவர்களோடு ஏதேன் தோட்டத்திற்குள்ளாகத் திரும்ப கொண்டு வருவதற்கு முடிவாக, தேவனுடைய மீட்பின் திட்டமானது கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தை செலுத்துவதன் மூலமே இருக்கிறது. ஒரு போதும் மரிப்பது என்பது, இனி இல்லை, வியாதியாய் ஒரு போதும் இருக்கப்போவதில்லை, ஒரு போதும் தலைவலி இருக்கப்போவதில்லை, ஒருபோதும் அடக்க ஆராதனைகள்

இனி இருக்கப் போவதில்லை. இனி கல்லறைகள் தோண்டப்படுவதே இல்லை. ஓ தேவனே, இனி சோர்வே இல்லை, ஒன்றுமே இல்லை அது அனைத்துமே முடிந்து விட்டது. ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் கழுவப்பட்ட, இந்த பரிபூரண உறுதியோடு ஒரு முறை இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் கீழாக வரும் போது அந்த மரண தூதனிடமிருந்து நாம் பாதுகாப்பாக இருக்கிறோம். அது நம்மைத் தொடமுடியாது.

தேவனே, இங்கே இன்றிரவு சிலர் இருக்கக் கூடுமானால், நீர் எல்லா மனுஷர்களுடைய இருதயங்களையும் அறிந்திருக்கிறீர். பரிசுத்த ஆவியானவர் அந்தப் பார்வையாளர்கள் மீது அசைவாடிக் கொண்டிருக்கிற தருணத்தில், தேவனே இப்பொழுதே, அவர்கள் அனைவரும் உம்மை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள அருள்புரியும். அந்த பின்மாற்றமடைந்தவர்கள், இன்றிரவு அவர்கள் திரும்பி வந்து வெட்கமடைவார்களாக. கர்த்தாவே, வியாதியஸ்தர்கள் அனைவரும் சுகமடைவார்களாக. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு தாகமுள்ள இருதயத்தின் மேலும் விழுந்து அதன் நிலத்தை ஈரமாக்குவராக. அவர்கள் ஆயத்தம் அடையட்டும், அது தூரத்தில் இல்லை .

அந்த மகத்தான நேரங்கள் காணக்கூடிய தூரத்தில் உள்ளன. அணுகுண்டுகளும், வெடிச் சத்தங்களும் மற்றும் காரியங்களும் குழம்பிப்போயுள்ள காலமாயுள்ளது. தேசங்களுக்கு இடையில் வருத்தங்கள், மனுஷர்களின் இருதயம் சோர்வடைதல், பயம், கடல் கொந்தளிப்பு, பூமியின் மேல் பெரும் பயம் நிறைந்த காட்சிகளின் தோற்றங்கள், தங்கள் தேவனை அறிந்தவர்கள் வீரச்செயல்களை செய்வார்கள் என்று நீர் அந்த நாளில் சொல்லியிருக்கிறீர். இங்கு நடக்கும் காரியங்கள் அனைத்தையும் நாங்கள்

பார்த்துக் கொண்டு இருக்கிறோம். தேவனே, எச்சரிப்பின் குரலானது இயேசுவின் நிமித்தமும் அவருடைய நாமத்திலும் இப்பொழுதே ஒவ்வொரு இருதயத்துக்குள்ளும் வேகமாக அடிதுக் கொண்டு செல்லட்டும்.

73. நம்முடைய தலைகள் வணங்கி இருக்கிறதான வேளையில் இன்றிரவில் அங்கே ஒருவர் இருக்கக்கூடுமானால்... எவர் ஒருவரையும் பார்க்காதீர்கள். சற்று தலை தாழ்ந்த நிலையில், தயவு செய்து ஒரு சில நிமிடங்கள் அப்படியே ஜெபியுங்கள். ஜீவன் உள்ளோருக்கும் மரித்தோருக்கும் மத்தியில் நான் நின்று கொண்டு இருப்பதை அறிந்து நான் சிலவற்றை உங்களிடம் கேட்கப்போகிறேன். இதைச் செய்யும்படியாக ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு இனி ஒரு போதும் கிடைக்காது, இதுவே கடைசி தருணமாக இருக்கலாம் என்பதை அறிந்து... உங்களுடைய இருதயம் உங்களுக்கு தெரியும், இப்பொழுது அந்த பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது உங்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் எங்கு நின்று கொண்டு இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுடைய ஜெபவரிசையானது கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு தேவனுடைய சிந்தப்பட்ட இரத்தத்தின் பாதையில் மூலமாக மீட்புக்கு வந்து நீங்கள் சபைக்குச் சென்று வருவதையும் சபையில் செயலாற்று வதையும் அறிந்திருக்கிறீர்கள். ஆனால் உங்கள் இருதயத்திலோ நீங்கள் ஒரு போதும் மீட்கப்படவில்லை என்றும் மாம்சமும், பொறாமையும், விரோதமும், அங்கே ஏதோ ஒன்றும் இருக்கிறதையும் அறிவீர்கள். அதனுடன் இனி மேலும் அப்படி நடப்பிக்காமல், கர்த்தராகிய இயேசுவிடம் நாம் வருவோம்.

74. "தேவனே என் மீது இரக்கமாயிரும், இப்பொழுதும் நான் அதை என் முழு இருதயத்தோடும் ஏற்றுக் கொள்கிறேன், இந்த வேளையில் நீர் தயவாக எனக்குள் வருவீரா-? " என்று இன்றிரவு, அவரிடம் உங்கள் கரத்தை உயர்த்திக் கூறுவீர்களா-?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக வேறு யாராகிலும்-? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக வேறு யாராகிலும்-? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. மேலே மண்டபத்தின் உட்பகுதியின் உயரத்தில் அமரக்கூடிய இடத்தில்-? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக என்னுடைய வலது பக்கத்தில் மேல் பகுதியில் வேறு யாராகிலும்-? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஐயா தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக இங்கே கீழ் தளங்களில் வேறு யாராகிலும், ஐயா தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக... மகனே தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ஓ என்னே-! அப்படியே பார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. பரிசுத்தாவியானவர் இங்கிருப்பதை நான் அறிந்து இருக்கிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வேறுயாராகிலும்-?

"தேவனே என் மேல் இரக்கமாயிரும்" என்று கூறுங்கள். ஐயா நான் உங்களை அங்கே பின்பாகப் பார்க்கிறேன். சிறுவனே நான் உன்னை அங்கே மேல் பகுதியில் பார்க்கிறேன். தேவன் உன்னுடனே இருப்பார். இப்பொழுது ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜெபித்துக் கொண்டு இருங்கள், அது தான் ஜெபிப்பதின் ஆதாரங்களாக இருக்கிறது.

75. அது என்னவாக இருக்கிறது. அந்த மீட்பின் பாதை, அந்த சிலுவையின் பாதை. நீங்கள் ஒரு சபையைச் சேர்ந்து,

ஆனால் அது ஒன்றுமில்லாமலும் இருக்கலாம். அது எல்லாம் சரி தான். அதற்கு எதிராக என்னிடத்தில் ஒன்றும் இல்லை; ஆனால் அது இரத்தத்தின் மூலமாக வார்த்தையின் மூலம் தண்ணீரில் கழுவப்பட்டு மீட்பின் பாதையின் மூலமாக வரவில்லை. அந்த வழியில் தான் நீ கிறிஸ்துவிடம் வரவேண்டும். "விசுவாசம் கேள்வியினால் வரும், வார்த்தையை கேட்பது சபையைச் சேர்ந்து கொள்வது அல்ல வார்த்தையை கேட்பது".

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" தேவன் உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்.

இங்கே, அதிக காலத்திற்கு முன்பல்ல, "இன்றிரவு சகோதரியே தேவன் உன்னை அழைக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று ஒரு வாலிபப் பெண்ணிடம் நான் கூறினேன்.

"என்னிடத்தில் யாராவது பேசுவதற்கு விரும்பினால், அவர்கள் பேசுவதைக் குறித்து அதிகமான அறிவைப்பெற்றிருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்" என்று அவள் கூறினாள்.

"நல்லது சகோதரி, பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறுவதை மாத்திரமே நான் கூறமுடியும்" என்று நான் கூறினேன்."இனிமேல் நான் அதைக் கேட்க விரும்பவில்லை" என்று அவள் கூறினாள்.

76. ஒரு வருடத்திற்குப் பிறகு நான் அந்த நகரத்தினூடாக கடந்து செல்கையில் அந்தப் பெண் ஒரு விபச்சாரியாக மாறியிருந்தாள். அவளுடைய ஆடைகள் அவள் மீது தாழ்வாக தொங்கிக் கொண்டிருந்தது, குடிப்பதற்கு மதுபானத்தைக் கொடுக்கமுற்பட்டாள். அவள் கூறினாள்...

நான் அவளைக் குறித்து வெட்கப்பட்டேன். "பிரசங்கியாரே என்ன என்று உங்களுக்குத் தெரியுமா-? அந்த இரவில் நான் இரட்சிக்கப்படவேண்டும் என்று நீங்கள் என்னிடத்தில் கூறியது உங்களுக்கு நினைவிருக்கிறதா" என்று அவள் கேட்டாள். "ஆம் நான் கூறினேன்" என்று நான் சொன்னேன்.

"அது சத்தியமாக இருக்கிறது" என்று அவள் கூறினாள்."வேறு பிரிக்கும் கோட்டை அங்கே நான் கடந்துவிட்டேன். கடந்த முறை என் இருதயத்தில் நான் தேவனைத் துக்கப்படுத்தினேன்" என்று கூறினாள்... இங்கே தான் அந்தப் பெண் குறிப்பிடத்தக்கதை செய்தாள். "என் தாயின் ஆத்துமா நரகத்தில் ஒரு பணியாரத்தை போல வறுக்கப்படுவதை என்னால் பார்த்து நகைக்க முடிகிறது" என்றாள். கடின இருதயம்...

ஓ நண்பனே ஒரு போதும் அந்தக் கோடு வரையிலும் செல்ல வேண்டாம். தேவன் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கும்போது (சகோதரன்.பிரன்ஹாம் பலமுறை தட்டுகிறார் - ஆசி) ஆனால் அவர் தட்டும் போது, அவர்... "என் ஆவி எப்பொழுதும் மனிதனோடு போராடுவது இல்லை".

77. இப்பொழுது உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா-? என்னிடத்தில் அல்ல தேவனிடத்திற்கு. அவ்வாறு செய்து "தேவனே என்மீது இரக்கமாயிரும் நான் ஒரு பாவியாக மரிக்கக்கூடாது, நான் உம்முடைய பாதையில் வரவிரும்புகிறேன். நான் சிலுவையின் பாதையில் வர விரும்புகிறேன். இப்பொழுதே என்னுடைய இருதயத்திற்குள் நீர் வந்து என்னை இரட்சிக்குமாறு நான் வேண்டுகிறேன்.

இந்தக் கட்டிடத்திற்குள்ளே எங்கேயாவது, வேறு யாராகிலும், உங்கள் கரங்களை உயர்த்துங்கள். சகோதரியே,

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்களை, அது சரியாய் இருக்கிறது. அது அருமையாய் இருக்கிறது. மேலே, மண்டபத்தின் உள்பகுதியில் உயரத்தில் அமரக்கூடிய இடங்கள், சுற்றுப்புறத்தில் எங்கேயாவது, இப்பொழுது உங்கள் கரங்களை உயர்த்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சீமாட்டியே, நான் உங்கள் கரத்தைக் காண்கிறேன். வழியில், பின்புறத்தில் அங்கே மேலே நான் உங்களைக் காண்கிறேன், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக உங்களைக் கூட தேவன் ஆசீர்வதிப்பாராக.

இப்பொழுது அவர் சமாதானத்தைப் பேசிக்கொண்டு இருக்கிறார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக சீமாட்டியே. சிறுபெண்ணே தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஓ அது அற்புதமாய் இருக்கிறது. நண்பர்களே உங்கள் தலைகளை தாழ்த்துங்கள்.

78. நான் இப்பொழுது ஏதோவொன்றைச் செய்வதற்கு வழிநடத்தப்படுவதாக உணருகிறேன். அந்த ஜனங்களை சரியாக இங்கே பலிபீடத்தண்டைக் கொண்டு வருவதற்கு வழிநடத்தப்பட உணருகிறேன். இப்பொழுதே அந்தத் தருணமாக இருக்கிறதை நான் உணருகிறேன். உங்கள் இருக்கைகளை விட்டு எழுந்து இங்கு வருவீர்களா-? இங்கே நான் அப்படியே நின்று கொண்டு கொஞ்சம் உங்களோடு ஜெபிக்கட்டுமா-? நீங்கள் அதைச் செய்வீர்களா-? கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்புகிற ஒவ்வொரு நபருக்கும் அதைச் செய்யுமாறு பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறுகிறார். நீங்கள் கொஞ்சம் எழுந்து இங்கு வருவீர்களா-? அது ஒரு பகிரங்கமான சாட்சியாக இருக்கிறது.

நீங்கள் இயேசுவை நேசிப்பீர்களானால் அவர் உங்களை நேசிக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் இருக்கைகளை விட்டு நீங்கள் எழும்புவீர்களா-? நாம் காலூன்றி நின்ற வண்ணமாக ஒவ்வொருவரும் சற்று நேரம் நீங்கள் காலூன்றி நில்லுங்கள். ---இம்மானுவேலரின் இரத்தக்குழாய்களிலிருந்து....

பாவிகள் மூழ்கி... ஐயா, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அந்த... தேவன் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு வியாதியை சுகமாக்கக் கூடுமானால், நிச்சயமாக அவர் உங்களுடைய ஆத்துமாவுக்காக அதைக் கேட்பார். என்னுடைய சகோதரனே இங்கே வாருங்கள். இங்கே வாருங்கள்... மண்டபத்தின் உள்பகுதியில் உயரத்தில் அமரக்கூடிய இடங்களை விட்டு கீழே நீங்கள் வருவீர்களா-? எல்லா இடங்களிலும் இருந்தும், உடனே கீழே வாருங்கள். இதைச் செய்யும் படியாக பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில் கூறுகிறார். என் அருமையான சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்பொழுதே அவர் உனக்கு வாஞ்சையுள்ள இருதயத்தைக் கொடுப்பாராக. தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. கொஞ்சம் சரியாக இங்கே நில்லுங்கள். ஒரு கொஞ்ச நேரத்திற்கு நீ வருவாயா-? தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக -? இங்கே வாருங்கள், அன்பே தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

பாவிகள் முழுகும் போது...

79. அது சரியாய் இருக்கிறது. உடனே கீழே வாருங்கள். (இந்தப் பாடலை அங்கே நீங்கள் பாடுவீர்களா-?) (ஒரு சகோதரன் சபையை பாடலில் நடத்துகிறார் - ஆசி)

இப்பொழுதே நீங்கள் வருவீர்களா-? சிறுபிள்ளைகள், முதியவர்... இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு

வாலிபப் பெண் இங்கு நின்று கொண்டிருக்கிறாள். அவள் இந்த இடத்தை விட்டுப் போகும் போது அவள் அந்த கக்கதண்டங்களை அவள் பயன்படுத்துவாள் என்பதை நான் விசுவாசிக்கவில்லை. இல்லை, ஐயா. இங்கே ஒரு இந்தியப் பெண் அல்லது இந்திய மனிதன் வருகிறார், ஒரு கூட்டமானது வந்து கொண்டிருக்கிறது. ஓ தேவனே இரக்கமாயிரும். (ஒரு சகோதரன் பாடல் பாடுவதை நடத்துகிறார், வேறொரு சகோதரன் ஜனங்ளை பீடத்தண்டை அழைக்கிறார் - ஆசி)

80. கர்த்தராகிய இயேசுவின் சிந்தப்பட்ட இரத்தத்தின் அடிப்படையின் மீது நீங்கள் வர மாட்டீர்களா-? இங்கே ஒரு பெண் வருகிறாள். அவளது சிறு பையனைக் கொண்டு வருகிறாள். அந்த விதமாகத் தான் வரவேண்டும். பின்மாற்றம் அடைந்துள்ள நீ, தேவனை விட்டு தூரமாய் இருக்கும் நீ, தேவன், இப்பொழுது இருக்கிறார் என்று வாஞ்சிக்கும் நீ, வரமாட்டாயா-? கொஞ்சம் நெருக்கமாக நீ வரமாட்டாயா-? எனவே நாம் சேர்ந்து ஜெபிக்க முடியும். இங்கே நகர்ந்து வாருங்கள். "கர்த்தாவே..." என்று கூறுங்கள். அவர் விரித்து வைத்துள்ள போர்வையை நீங்கள் காணமுடியவில்லையா-? தம்முடைய சொந்த நேசகுமாரனைக் கொண்டு மீட்பின் திட்டத்தின் மூலமாக உங்களை வீட்டிற்கு வரவேற்பார்.

வாலிப மனிதனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. உன்னுடைய கரத்தை ஒரு வேளை நான் மிகச் சரியாக எட்டமுடியாமல் இருக்கலாம், ஆனால் தேவன் உன்னை அறிந்துள்ளார். சகோதரி வாருங்கள்.

...விசுவாசத்தைக் கொண்டு நான் பார்ப்பது முதல்... (நீ இந்தவிதமாக வரமாட்டாயா-? இந்த இடத்திற்கு வா)... காயங்களில் பாயந்தோடிக் கொண்டிருக்கும்...(சிறு பெண்ணே வா, அது அப்படியே அருமையாய் இருக்கிறது. அன்பே

உனக்கு விருப்பமானால் இப்பொழுதே இங்கே கீழே இறங்கி வா... நினைக்கின்ற அன்பானது... அப்படியே வா, இங்கே சரியாக நில், யாராவது, அங்கே ஓர் ஊற்று இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது... நான் மரித்...

81. என்னே, இது அற்புதமாக இருக்கிறதில்லையா-? அங்கே பின்னால் இருக்கக்கூடிய சிலருக்கு அந்த குற்ற உணர்வு இருக்கவில்லையா-? நீங்கள் ஒரு பாவியாக இருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியும் - உங்களுக்கு தெரியும், ஆனால் இந்த மகத்தான நேரமானது சென்று கொண்டிருக்கிறதான வேளையில் சகோதரனே, இப்பொழுதே என்னை ஜெபத்தில் நினைவு கூரும் என்று கூறுவதற்கு அந்தக் குற்ற உணர்வு உங்களுக்கு வரவில்லையா-?

நண்பனே பார், இந்த ஊழியத்தின் கீழ் இந்தக் கட்டிடத்தில் இரவில் முடவர்களை எழுந்திருக்கச் செய்து நடக்க வைத்திருப்பதை நீ இங்கே பார்த்து இருப்பாயானால், அவர் சகல விதமான அற்புதங்களையும் நடக்கும்படி செய்வார். அவர் தூரத்தில் முன்னும் பின்னும் மெதுவாக அசைவாடி ஜனங்களுடைய இருதயத்தை அறிந்தவராய் இருக்கிறார். இப்பொழுது அதே வெளிச்சமானாது பார்வையாளர்களுக்கு மேலே தொங்கிக் கொண்டிருப்பதை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னை விசுவாசித்தால் என் வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள். அது சத்தியமாய் இருக்கிறது. ஒரு மனிதன் உங்களிடம் கூறியதற்குப் பின்னணியில் தேவன் இல்லை என்றால், ஆனால் அவர் அதற்கு பின்னணியில் இருப்பாரானால், ஒரு மனிதன் கூறியதை விசுவாசிக்க உங்களுக்கு உரிமை இருக்கிறது.

82. இப்பொழுது அங்கே இன்னும் ஒரு பாவி வரக்கூடுமா-? பாவிகளை தேவன் இப்பொழுதே

அழைக்கிறார். நீ வருவாயா-? கர்த்தராகிய இயேசுவிடம் இனிமையாக வா மண்டபத்தின் உள் பகுதியில் உயரத்தில் அமரக்கூடிய இடங்களிலிருந்து, எந்த இடத்தில் இருந்தும் இப்பொழுதே கீழே இறங்குங்கள்.

இங்கு எத்தனை பேர் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை, அப்படியானால் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமா-? இப்பொழுது, சிந்தப்பட்ட இரத்தத்தின் அடிப்படையில் நீங்கள் வருவீர்களா-? "கர்த்தாவே நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டு வருதல். இப்பொழுது இங்கேயே நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்வீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அடுத்த சிலமணி நிமிடங்களில் அப்படிப்பட்டதான கர்த்தருடைய ஆவியானவர் ஊற்றப்படப் போவதையும், ஜனங்கள் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட போவதையும், பாவிகள் கிறிஸ்துவினிடம் வரப்போவதையும் நான் விசுவாசிக்கிறேன். பரிசுத்தாவியின் ஞான ஸ்நானத்தை விரும்புகிறவர்களாகிய நீங்கள், சரியாக, உங்கள் பாதையை விட்டு விலகாமலும் இருங்கள்.

83. ஓ என்னே-! இதற்காகத்தான் நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். கொஞ்சம் பார்த்து வாருங்கள். தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. குருடருக்காகவும், துன்பப்படுகிறவருக் காகவும் ஒரு ஜெபத்தை அவர் கேட்கக் கூடுமானால் பரிசுத்த ஆவிக்காக ஒரு ஜெபத்தை அவர் கேட்க மாட்டாரா-? மீட்பின் திட்டமாகிய அவருடைய இரட்சிப்புக்கு, கீழே வருகின்ற, வருகின்ற, வருகின்ற அந்த இராஜாவினுடைய பெரும் பாதையைக் கொஞ்சம் நோக்குங்கள். நீ விடுதலை அடையும்படியாக கிறிஸ்துவாகிய அந்த மீட்பர் மரித்தார் என்பதை நீ விசுவாசிக்கின்றாயா-? ஒவ்வொரு இடத்திலும் இருந்து கர்த்தராகிய இயேசுவிடம்

வருகின்ற ஆண்களும், பெண்களும் அப்படியே நோக்குங்கள். நீங்கள் செய்வீர்களா-? "விருப்பமுள்ளவன் வந்து ஜீவத் தண்ணீருற்றிலிருந்து இலவசமாக பானம் பன்னக்கடவன், விருப்பமுள்ளவன்".

84. நீ வருவாயா-? ஜனங்கள் மண்டபத்தின் உள்பகுதியின் உயரத்தில் அமரக் கூடிய இடங்களிலும் அதைச் சுற்றிலும் இருந்து இன்னும் கீழே வந்து கொண்டு தான் இருக்கின்றனர். இப்பொழுது நீங்கள் சரியாக, மேல் பகுதியில் அப்படியே நகராமல் இருப்பீர்களா-? என்ன ஓர் அற்புதமான சமயம். இங்கே, வார்த்தையைச் சுற்றிலும் அந்த அற்புதமான ஐக்கியத்தில் சேர்ந்து கொள்வதற்கு விருப்பமாக உள்ள இன்னும் யாராவது ஒருவர் இருக்கின்றீரா-?

கர்த்தராகிய இயேசுவினிடம் வருவதற்கு, வரிசையாக அமைக்கப்பட்டுள்ள அமரும் இடங்களுக்கு இடையே வழி நடையில் இரண்டு வாலிப ஸ்பானியப் பையன்கள் நடந்து வந்து கொண்டு இருக்கின்றனர். இப்பொழுது நீங்கள் கீழே வருகின்ற போதே நீங்கள் உங்கள் வழியை உண்டாக்கிக் கொள்ள மாட்டீர்களா-? விசுவாசித்துக் கொண்டே வாருங்கள். இங்கே ஒரு மனிதன் வருகிறார், சிலுவையினிடத்திற்கு வருவதற்கு, அவருடைய வழியிலேயே கக்க தண்டங்களைக் கொண்டு, நொண்டிக் கொண்டே கீழே நடந்து வந்து கொண்டிருக்கிறார். அது தான் பாதை. அவர் ஒரு பாவியாய் இருப்பாரானால் கீழே வந்து இரட்சிக்கப்படுவாராக. இந்த மீட்பானது பாவத்துக்கும் வியாதிக்கும் இரண்டுக்குமே தான் இருக்கிறது. ஊற்றானது திறக்கப்பட்டுள்ளது. இயேசு மரித்தார், அந்த கொடுக்கானது மரணத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு விட்டது. இப்பொழுது அவரிடத்தில் வந்து கொண்டிருக்கும் இந்தப் பாவிகளை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு விசுவாசியையும்

ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு அந்த கர்த்தருடைய வல்லமையானது இப்பொழுது இங்கிருக்கிறது.

85. உங்களை இங்கே அழைத்தவர் அந்த கிறிஸ்துவே. தேவன் தாமே உங்களை இந்தப் பலிபீடத்தண்டைக்கு அழைத்திருக்கிறார். "என் பிதா ஒருவனை அழைத்தால் ஒழிய எந்த மனிதனும் என்னிடத்தில் வருவதில்லை". அற்புதமான நேரம், வாலிபப் பெண்கள் வருகின்றனர், வாலிப மனிதர்கள் வருகின்றனர். பலிபீடத்தைச் சுற்றிலும் இன்னும் நிரம்பிக் கொண்டிருக்கிறது. வரிசையாக அமைக்கப்பட்டுள்ள அமரும் இடங்களுக்கு, இடையே உள்ள வழி நடையானது நெருக்கிக் கொண்டு உள்ளது அற்புதமான நேரம்.

ஒரு அற்புதமான நேரம் உனக்கு ஒரு அற்புதமான நேரம் எனக்கு நம்முடைய ராஜா, இயேசுவை சந்திக்க

நாம் ஆயத்தமாக இருப்போமானால், என்ன ஒரு அற்புதமான நேரமாக இருக்கும்,

ஓ, அற்புதமான நேரம் உனக்கு ஒரு அற்புதமான நேரம் எனக்கு நம்முடைய ராஜா, இயேசுவை சந்திக்க

நாம் ஆயத்தமாக இருப்போமானால் என்ன ஒரு அற்புதமான நேரமாக இருக்கும்,

ஓ, அற்புதமான நேரம் உனக்கு ஒரு அற்புதமான நேரம் எனக்கு நம்முடைய ராஜா, இயேசுவை சந்திக்க

நாம் ஆயத்தமாக இருப்போமானால் என்ன ஒரு அற்புதமான நேரமாக இருக்கும்,

ஓ, அற்புதமான நேரம் உனக்கு ஒரு அற்புதமான நேரம் எனக்கு நம்முடைய ராஜா, இயேசுவை சந்திக்க

நாம் ஆயத்தமாக இருப்போமானால் என்ன ஒரு அற்புதமான நேரமாக இருக்கும்,

ஓ, அற்புதமான நேரம் உனக்கு

ஒரு அற்புதமான நேரம் எனக்கு நம்முடைய ராஜா, இயேசுவை சந்திக்க

நாம் ஆயத்தமாக இருப்போமானால்

என்ன ஒரு அற்புதமான நேரமாக இருக்கும்.

86. இங்குள்ள எல்லா இடங்களிலும் இருக்கின்ற நாம் அனைவரும் நமது கரங்களை இப்பொழுது தேவனிடத்திற்கு உயர்த்துவோமாக. தேவன் அதை வாக்குத்தத்தம் செய்து இருக்கிறார். தேவன் பொய் உரைக்கமாட்டார். இங்கே சரியா, இப்பொழுது அது உங்கள் மேலேயே இருக்கிறது. பார்வையாளர் மத்தியில் பரிசுத்த அந்த பரிசுத்த ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருக்கிறார்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, ஜீவனின் மூலகாரனரே நன்மையான ஒவ்வொரு ஈவையும் தருபவரே உம்முடைய ஆசீர்வாதத்தையும் அனுப்பும். தேவனாகிய கர்த்தாவே, ஒவ்வொரு இருதயத்தையும் பரிசுத்தாவியினால் நிரப்பும், தேவனுடைய அக்கினியானது பலிபீடத்தில் இருந்து வருவதாக.

ஒவ்வொரு மனிதனும் மனுஷியும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளட்டும் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள் இயேசுவின் நாமத்தில் இரட்சிக்கப்படுவாயாக. உயர எழும்பு, இங்கு நீ தேடிக் கொண்டிருப்பவர் இங்கிருக்கிறார். எழும்பு தெய்வீகத்தை நீ சாட்சி பகருவாய். அந்த கிறிஸ்துவைப் பார் உனக்கு நித்திய ஜீவன் கொடுப்பதற்கும் உன்னுடைய இரட்சிப்பை உனக்கு கொண்டு வருவதற்கும் தேவனுடைய குமாரன் இங்கு இருக்கிறார்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, ஆசீர்வதியும்.

அவர்கள் ஒவ்வொருவரையும் இரட்சியும்.

சாத்தான் ஜெயங்கொள்ளப்பட்டு விட்டான்,

இயேசுவின் நாமத்தில்...